www.padippakam.com

இந்திய மேலாதிக்கத்திற்குப் பலியான ஈழம்:

# வர்க்கப் பார்வையை மறுக்கும் தமிழ்த் தேசியர்களுக்கு மறுப்புரை



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

இந்திய மேலாதிக்கத்துக்குப் பலியான ஈழம்:

# வர்க்கப் பார்வையை மறுக்கும் தமிழ்த் தேசியர்களுக்கு மறுப்புரை

புதிய ஜனநாயகம் வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com


- ***வெளியீடு :***

  புதிய ஜனநாயகம்,
  110, இரண்டாம் தளம்,
  63, என்.எஸ்.கே. சாலை,
  கோடம்பாக்கம், சென்னை - 600 024.
  தொலைபேசி: 94446 32561

- ***முதற்பதிப்பு :***

  மே - 2009

- ***இரண்டாம் பதிப்பு :***

  ஜூன் - 2009

- ***அச்சு :***

  எழில் பிரிண்ட்ஸ், சென்னை - 24,
  தொலைபேசி: 94457 67603

**நூல் கிடைக்குமிடங்கள் :** புதிய கலாச்சாரம்
16, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை,
(15-வது தெரு அருகில்),
அசோக் நகர்,
சென்னை – 600 083.
தொலைபேசி: 044-23718706

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா தெரு,
எல்லீசு சாலை,
சென்னை – 600 002.
தொலைபேசி: 044-28412367

**விலை : ரூ. 20.00**


படிப்பகம்

www.padippakam.com

# பொருளடக்கம்


1. முன்னுரை 4

2. இந்திய மேலாதிக்கத்துக்குப் பலியான ஈழம்: வர்க்கப் பார்வையை மறுக்கும் தமிழ்த் தேசியர்களுக்கு மறுப்புரை 7

3. இலங்கையில் இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்கள் விரிவடைந்து வருவது பற்றி.... 30

4. இலங்கைப் பொருளாதாரத்தில் இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஆதிக்கம் - சில விவரக் குறிப்புகள் 35


படிப்பகம்

www.padippakam.com

# முன்னுரை

ஈழ விடுதலைப் போர் கசப்பானதொரு முடிவை எட்டியிருக்கிறது. இது புலிகள் இயக்கத்தின் தோல்வி மட்டுமல்ல, ஈழப்போராட்டம் சந்தித்திருக்கும் ஒரு பாரிய பின்னடைவு. இத்தகையதொரு நிலைமை நெருங்குகிறது என்பதைக் கடந்த சில மாதங்களின் களநிலமைகளிலிருந்து அனைவருமே புரிந்து கொள்ள இயன்றதெனினும், இந்த முடிவு நம்மைத் துயரத்தில் ஆழ்த்துகிறது. நிராயுதபாணிகளாகச் சரணடைந்த புலிகள் இயக்கத் தலைவர்களைச் சுட்டுக் கொன்றுவிட்டு, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களைப் புழுக்களைப் போலக் கொன்றொழித்துவிட்டு, போர்க்குற்றத்தின் தடயங்களையும் அழிக்கிறது சிங்கள இராணுவம். போர்க்குற்றவாளி ராஜபக்சே கேட்பார் யாருமின்றிக் கொக்கரிப்பதையும், வெற்றிக் களிப்பில் சிங்கள இனவெறி கூத்தாடுவதையும் காண்கிறோம். இந்த இன அழிப்புப் போரில் சீனாவும் பாகிஸ்தானும் ஆயுதங்களை வழங்கியதுடன் இலங்கை அரசுக்கு அரணாகவும் நின்றிருக்கின்றனர். அமெரிக்காவையும் மேற்குலக நாடுகளையும் ராஜபக்சே எடுத்தெறிந்து பேசிய போதிலும், அவர்கள் எதுவும் செய்து விடவில்லை. இந்திய அரசோ இந்த இனப்படுகொலைக்கு இறுதிவரை துணைநின்று வழிநடத்தியிருக்கிறது.

ஈவிரக்கமற்ற முறையில் நடத்தி முடிக்கப்பட்டிருக்கும் இந்தப் படுகொலையின் கடைசி நாட்கள் இந்திய மேலாதிக்கத்தின் கோரமுகத்தை நமக்குக் காட்டுகின்றன. மே 13 அன்று தமிழகத்தில் தேர்தல் முடிந்த பின் இறுதித் தாக்குதலை வைத்துக் கொள்ளுமாறு இலங்கை அரசுக்கு வழிகாட்டி இயக்கியிருக்கிறது இந்திய அரசு. ஈழ ஆதரவாளர்களோ மே 16 அன்று தேர்தல் முடிவுகள் வரும்வரை 'இறுதி முடிவு' எதுவும் எடுக்கவேண்டாமென புலிகளுக்கு ஆலோசனை கூறியிருப்பார்கள் போலும்!

தோல்வியின் விளிம்புக்குத் தள்ளப்பட்ட நிலையிலும், 'துப்பாக்கிகளை மவுனிக்கச் செய்வது' என்ற தங்களது இறுதி முடிவை அறிவிப்பதற்கு இந்தியத் தேர்தல் முடிவுகள் தெரியும் வரை (மே 16) புலிகள்

படிப்பகம்

www.padippakam.com

காத்திருந்திருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. தோல்வியை நோக்கித்தான் சென்று கொண்டிருக்கிறோம் என்பதும், ஒபாமா உள் விட்ட மேற்குலக நாடுகளின் கோரிக்கைகளை ராஜபக்சே அரசு நிரா கரித்து விட்டது என்பதும் புலிகள் அறியாததல்ல. புலிகளுக்கு நம்பிக் கையூட்டும் எந்த நிகழ்வும் இந்தக் கடைசி நாட்களில் நடந்துவிட வில்லை. இருப்பினும் அன்றாடம் பல்லாயிரம் மக்களும் புலிகளும் கொத்துக்கொத்தாகக் கொல்லப்பட்டபோதும், கடைசியாக புலிகள் இயக்கத் தலைவர்களே கொல்லப்படும் நிலைமை நெருங்கிய போதும், 'டில்லியில் ஆட்சி மாறினால் போர்நிறுத்தம் வந்துவிடும்' என்று அவர் கள் எதிர்பார்த்திருக்கிறார்கள். கடைசி நாட்களின் நிகழ்வுகள் இதனைத் தெளிவாக நமக்குக் காட்டுகின்றன. இந்த மூடநம்பிக்கை மிகவும் பார தூரமான இழப்புகளை அவர்களுக்கு ஏற்படுத்தியிருக்கிறது.

ஒருவேளை, ஈழ ஆதரவாளர்கள் எதிர்பார்த்த வெற்றியை ஜெய லலிதாவும் பாரதிய ஜனதாவும் பெற்றிருந்தால், மறுகணமே போர் நிறுத்தம் வந்திருக்குமா? அப்படி ஒரு பிரமை ஒருவேளை புலிகளுக்கு இருந்திருந்தாலும், இங்கிருக்கும் புலிகளின் ஆதரவாளர்கள் அந்தப் பிரமையை நீக்கி, அவர்களுக்குத் தெளிவை ஏற்படுத்தி இருக்கவேண் டும். மாறாக, அத்தகைய பிரமையை உருவாக்கும் திருப்பணியையே இவர்கள்தான் செய்து கொண்டிருந்தார்கள். ''இலை மலர்ந்தால் ஈழம் மலரும்'' என்றல்லவா பேசினார்கள்! இவர்கள் உருவாக்கிய இந்தப் பிரமைக்கு, தங்கள் உயிரையும் கவுரவத்தையும் காவு கொடுத்திருக் கிறார்கள் ஈழத் தமிழ்மக்கள்.

இவ்வாறு குற்றம் சாட்டுவதன் காரணமாக ஈழ ஆதரவாளர்கள் நம்மீது ஆத்திரப்படலாம். அது குறி தவறிய ஆத்திரம். மே 21-ஆம் தேதியன்று நெடுமாறன், வைகோ, ராமதாசு முதலானோர் நடத்திய பேரணிக்கு ஜெயலலிதாவை அழைத்தார்கள். அவர் வரவில்லை. அது மட்டுமல்ல, ஜெயலலிதா விடுத்த அறிக்கையிலும் 'தனிஈழம்' என்பதோ, 'இனப்படுகொலை' என்பதோ 'ராஜபக்சே ஒரு போர்க் குற்றவாளி' என்பதோ வார்த்தை அளவில் கூட இடம்பெறவில்லை. இந்த அம்மையாரின் வெற்றிதான் போர்நிறுத்தத்தைக் கொண்டு வரும் என்று ஈழத்தமிழ் மக்களையும் புலிகளையும் நம்ப வைத்து அவர் களைப் படுகுழியில் தள்ளியிருக்கிறார்கள் ஈழ ஆதரவாளர்கள். எந்தப் புலிகளை இவர்கள் ஆதரித்தார்களோ, அந்தப் புலிகளையே காவு வாங்கிவிட்டது இவர்களுடைய பிழைப்புவாதத் தேர்தல் அரசியல்.

எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், இந்திய அரசு என்பது ஈழ விடுதலையின் நண்பனல்ல, எதிரி என்பதைக் கடந்த 25 ஆண்டுகளாகவே நாங்கள் கூறி வருகிறோம். இது தொடர்பாக



படிப்பகம்

www.padippakam.com

புலிகளையும் அவர்களது தமிழக ஆதரவாளர்களையும் விமரிசித்தும் வருகிறோம். ''தனி ஈழத்தை இந்திய அரசு எதிர்க்கிறது'' என்பதை எல்லாக் கட்சி ஆட்சியாளர்களும் தெளிவுபடக் கூறியிருக்கிறார்கள். தாங்கள் சிங்கள அரசின் ஆதரவாளர்கள்தான் என்பதை நடைமுறை யில் பலமுறை நிரூபித்தும் இருக்கிறார்கள்.

வர்க்கம், மேலாதிக்கம், ஏகாதிபத்தியம் போன்ற சொற்களை, புலிகளும் புலிகளின் ஆதரவாளர்களும் காதால் கேட்கவே விரும்பு வதில்லை என்பதை நாமறிவோம். இருப்பினும், இந்திய மேலாதிக் கத்தின் பின்புலம், தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நலன் என்பதையும், இந்த ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்கு எதிராக ஒரு போதும் எந்த ஆட்சியும் செயல்படாது என்பதையும் நாம் பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இந்திய அரசை எதிர்த்துப் போராடு வதும் அதன் பொருட்டு பிற விடுதலை இயக்கங்கள் மற்றும் மக்களின் ஆதரவைத் திரட்டுவதும்தான் ஈழ விடுதலைப் போர் வெற்றிபெற ஒரே வழி என்றும் கூறியிருக்கிறோம்.

இவையெல்லாம் காரியத்துக்கு ஆகாத வழிகள் போலவும், தாங்கள் தெரிவு செய்திருக்கும் வழிதான் நடைமுறை சாத்தியமானது என்றும் கருதிக் கொண்டு தில்லிக்குக் காவடி எடுக்கும் வேலையைத் தொடர்ந்தார்கள் ஈழ ஆதரவாளர்கள். 'நரியைப் பரியாக்கி விடலாம்' என்பது அவர்களது நம்பிக்கை. இவர்களுடைய நம்பிக்கை இன்று பல்லாயிரம் உயிர்களைக் காவு கொண்டிருப்பதுடன் சிங்கள அரசின் இறுதி வெற்றியையும் சாத்தியமாக்கியிருக்கிறது.

இலங்கையின் மீதான இந்திய மேலாதிக்கத்தின் பின்னால் இருக் கும் இந்தியத் தரகு அதிகார வர்க்க முதிலாளிகளின் நலன்கள் குறித்த விவரங்கள், மேலாதிக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கத்தி லான இந்திய அரசின் செயல்பாடுகள் ஆகியவற்றைச் சுருக்கமாக எடுத் தியம்பும் இந்த வெளியீடு, ஏப்ரல் இறுதியில் இன அழிப்புப் போர் உச்சத்தில் இருந்த தருணத்தில் தயாரிக்கப்பட்டது. தற்போது போர் முடிந்து விட்டதாக சிங்கள அரசு அறிவித்திருக்கிறது. எனினும் ஈழத் தமிழ் மக்களைப் பொருத்தவரை போர் இன்னும் முடியவில்லை. துவங்கவிருக்கும் புதிய சுற்றில், சிங்கள இனவெறி அரசுடன் இந்திய மேலாதிக்கத்தையும் எதிரிகளின் பட்டியலில் அவர்கள் இணைத்துக் கொள்வார்கள் என்று நம்புகிறோம். ஈழ விடுதலைப் போராட்டம் அளித்துள்ள படிப்பினைகளில் இது மிகவும் முக்கியமானது.

ஆசிரியர் குழு,
புதிய ஜனநாயகம்.



படிப்பகம்

www.padippakam.com

### இந்திய மேலாதிக்கத்துக்குப் பலியான ஈழம்:

# வர்க்கப் பார்வையை மறுக்கும் தமிழ்த் தேசியர்களுக்கு மறுப்புரை

"இந்தியா தலையிட்டு போரை நிறுத்த வேண்டும்'' - இதுதான் இலங்கை அரசின் தமிழின அழிப்புப் போருக்கு எதிராகத் தமிழகத்திலிருந்து எழுந்த முதன்மையான கோரிக்கை. சிங்கள இராணுவத்துக்கு பயிற்சி கொடுத்து, உளவு பார்த்துக் கொடுத்து, ஆயுதம் கொடுத்து, போரை நடத்துவதற்கு திட்டமிட்டும் கொடுத்து, புலிகளுக்கு பொருள் வரத்தைத் தடுக்கவும், தப்பிச் சென்றால் பிடிக்கவும் இந்தியக் கடற்படை மூலம் முற்றுகையிட்டு என சிங்கள அரசுக்கு எல்லா வகையிலும் இந்திய அரசு துணை நின்றிருக்கிறது என்று தெரிந்த பின்னரும், இந்திய இராணுவ சிப்பாய்களும், அதிகாரிகளும் களத்தில் நேரடியாகவே பங்கேற்றிருக்கிறார்கள் என்பது அம்பலமானதற்குப் பிறகும் கூட ''இந்தியா தலையிட்டு போரை நிறுத்த வேண்டும்'' என்ற இந்தக் கோரிக்கை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது.

தமிழ் தேசியவாதிகள் எனப்படுவோரும், ம.தி.மு.க, பா.ம.க போன்ற கட்சிகளும் இந்திய அரசின் மேற்கூறிய நடவடிக்கைகளுக்கு - அதாவது இந்திய அரசின் ஈழத்தமிழர் விரோத வெளியுறவுக் கொள்கைக்கு - கீழ்க்கண்டவாறு விளக்கமளித்துக் கொண்டிருந்தனர்: ''சோனியாவின் பழிவாங்கும் போக்குதான் இந்திய அரசின் ராஜபக்சே ஆதரவுக் கொள்கைக்குக் காரணம்; இரண்டாவதாக, வெளியுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கும் இடத்தில் இருக்கும் சிவசங்கர மேனன், எம்.கே. நாராயணன் போன்ற மலையாள அதிகாரிகளிடம் உள்ள



படிப்பகம்

www.padippakam.com

தமிழர் விரோதப் போக்கு. அவர்களது உள்நோக்கம் கொண்ட ஆலோசனைகளால் தவறாக வழிநடத்தப் படுவதனால்தான் மைய அரசு ஈழத்தமிழர்களுக்கு எதிராக சிங்கள அரசை ஆதரிக்கிறது. அன்று தீட்சித் என்ற அதிகாரியின் பேச்சைக் கேட்டுத்தான் புலிகளுக்கு எதிராக இராணுவத்தை ஏவினார் ராஜீவ், டெல்லியில் இந்திராவும், சென்னையில் எம்.ஜி.ஆரும் ஆட்சியில் இருந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது. அவர்கள் ஈழமே பெற்றுத் தந்திருப்பார்கள்.'' இவையெல்லாம் அவர்களது விளக்கங்கள்.

சோனியாவிடம் பழிவாங்கும் உணர்ச்சி இல்லை என்றோ, மேனனிடமும் நாராயணனிடமும் தமிழர் விரோதப்போக்கு இல்லை என்றோ வாதிடுவது நமது நோக்கமல்ல; இருக்கக்கூடும். ஆனால் தனி நபர்களின் குணாதிசயங்களோ, மனோபாவங்களோ ஒரு நாட்டின் அயலுறவுக் கொள்கையைத் தீர்மானிக்கின்ற நிலைமை மன்னராட்சிக் காலத்தில் வேண்டுமானால் ஓரளவு சாத்தியமாக இருந்திருக்கலாம். மக்களின் புலன்களையும், ரசனைகளையும் கூட பன்னாட்டு நிறுவனங்கள் ஆட்டிப்படைக்க இயலும் இந்த ஏகாதிபத்தியக் காலகட்டத்தில், ஒரு நாட்டின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கொள்கைகளை சில தனிநபர்களின் விருப்பு வெறுப்புகள் தீர்மானிக்கின்றன என்று கூறுவது, மிகவும் எளிமையான ஆனால் பாமரத்தனமான விளக்கம்.

ஒரு நாட்டின் உள்நாட்டுக் கொள்கைகளாகட்டும், வெளியுறவுக் கொள்கையாகட்டும் அவற்றைத் தீர்மானிப்பதில் பிரதானப் பாத்திர மாற்றுவது, அந்த நாட்டின் ஆளும் வர்க்கத்தின் நலன்கள்தான். இதனைப் புரிந்து கொள்ளாமல், (அல்லது புரிந்தாலும் புரியாதது போல நடித்து) மேற்கூறிய அடிப்படையிலான பொதுக்கருத்தை தமிழக மக்கள் மத்தியில் இவர்கள் உருவாக்கியிருந்தனர். இந்தப் பாமரத்தனமான புரிதலைப் பயன்படுத்திக் கொண்டுதான், நேற்றுவரை வெறிகொண்ட ஈழ எதிர்ப்பாளராக இருந்த ஜெயலலிதா, திடீரென்று தான் மனம் மாறிவிட்டதாகவும், இராணுவத்தை அனுப்பி தனி ஈழம் அமைத்துத் தரப் போவதாகவும் தேர்தல் வாக்குறுதி தர முடிந்தது. இந்தப் பித்தலாட்டத்தை நம்புவதற்கும் ஆள் இருந்தது. அதேபோல, தாங்கள் ஆட்சிக்கு வந்தால், நூறே நாளில் ஈழப்பிரச்சினையைத் தீர்த்துவிடுவதாக பாரதிய ஜனதாவின் மாநிலத் தலைவர் இல. கணேசனும் பேச முடிந்தது. ஜெயலலிதாவின் வெற்றியோ, பாரதிய ஜனதாவின் வெற்றியோ இந்திய அரசின் ஈழக்கொள்கையை மாற்றிவிடும் அல்லது குறைந்த பட்சம் போர்நிறுத்தத்தைக் கொண்டுவரும் என்ற நம்பிக்கை புலிகளுக்கும், புலிகளின் ஆதரவாளர்களுக்கும் இருக்கத்தான் செய்தது.



படிப்பகம்

www.padippakam.com

ஈழத்தில் தமிழினத்தின் மீது சிங்கள இனவெறி அரசு தொடுக்கின்ற அடக்குமுறை, ஆதிக்கமாக இருக்கட்டும், இந்தியாவில் காஷ்மீர் மற்றும் வடகிழக்கு இந்திய மாநிலங்களில் இந்திய அரசு நடத்தி வரும் இன அடக்குமுறையாகட்டும், ஈழம் தொடர்பாக இந்திய அரசு கடைப்பிடித்து வரும் கொள்கையாகட்டும், இவை அனைத்துக்கும் ஆளும் வர்க்கங்களின் நலன்களே காரணமாக அமைகின்றன. வர்க்க ஒடுக்குமுறையின் உருத்திரிந்த வெளிப்பாடுதான் இன ஒடுக்குமுறை. எனவே ஒவ்வொரு இன ஒடுக்குமுறையின் பின்னாலும் எந்த வர்க்கத்தின் நலன்கள் எவ்வாறு இயங்குகின்றன என்பது குறித்துப் புரிந்து கொள்ளாதவரை, ஒரு இன விடுதலைப் போராட்டம் வெற்றி பெற முடியாது. வர்க்கம் என்ற சொல் தமிழ் தேசியவாதிகளுக்கு எவ்வளவு கசப்பானதாக இருந்த போதிலும், இதுதான் உண்மை.

அமெரிக்க வல்லரசு, தனது உலக மேலாதிக்க நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்கு, ''பயங்கரவாதத்தை ஒழிப்பது, ஜனநாயகத்தை நிலைநாட்டுவது, மனித உரிமைகளைப் பாதுகாப்பது, அமெரிக்காவின் புவிசார் நலன்களைப் பாதுகாப்பது'' என்ற பல சொற்றொடர்களின் பின்னால் ஒளிந்து கொள்கிறது. சொந்த நாட்டின் குர்து இன மக்களைப் படுகொலை செய்தார் எனக் குற்றம் சாட்டி, சதாம் உசேனைத் தூக்கிலேற்றிய அமெரிக்க அரசு, கண் முன்னால் ராஜபக்சே நடத்தும் ஈழத்தமிழினப் படுகொலைக்கு சம்பிரதாயக் கண்டனங்களை மட்டுமே தெரிவிக்கிறது. திபெத்திலும், செசன்யாவிலும் மனித உரிமை மீறல் பற்றிப் பெரிதும் கவலைப்படும் அமெரிக்க அரசு, தமது சொந்த நாட்டு மக்கள் மீது இலங்கை அரசு வான்வழித் தாக்குதல் நடத்துவதையும், அவர்களை முட்கம்பி வேலிகளுக்குப் பின்னே வதை முகாம்களில் அடைத்து வைத்திருப்பதையும் பற்றி சில வார்த்தைகள் பேசுவதற்கே, ஐரோப்பிய நகரங்களில் இலட்சக்கணக்கான ஈழத்தமிழ் மக்கள் நாட்கணக்கில் போராட்டம் நடத்த வேண்டியிருக்கிறது.

போரை நிறுத்துமாறு இலங்கை அரசுக்கு ஆணையிட முடியாது என்றும், அது இலங்கையின் இறையாண்மையில் தலையிடுவதாகும் என்றும் கூறிவந்த இந்திய அரசு, 'இலங்கைத் தமிழர்களுக்குச் சம உரிமை பெற்றுத் தருவதற்காக' ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை உயிர்ப்பிக்கத் தயாராக இருக்கிறது. இறையாண்மையைக் காரணம் காட்டி, ஈழத் தமிழர்களின் உயிரைப் பாதுகாப்பதற்குத் தலையிட முடியாத அரசு, ''அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காகத் தலையிடுகிறேன்'' என்று கூறுவதன் நோக்கம் - மேலாதிக்கம். 'தொப்புள் கொடி உறவு, தமிழகத்துக்கும் ஈழத்தமிழர்களுக்கும் இடையிலான



படிப்பகம்

www.padippakam.com
வரலாற்று ரீதியான, பண்பாட்டு ரீதியான தொடர்புகள்' என்ற நியாயங்கள், தனக்குத் தேவைப்படும் நேரங்களில் மட்டும் இந்திய ஆளும் வர்க்கத்தால் பயன்படுத்திக் கொள்ளப்படுகின்றன.

'இந்தியாவின் புவிசார் நலன்கள், தெற்காசியப் பொருளாதார ஒத்துழைப்பு, இலங்கை அரசின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள் கைகள் இந்தியாவின் நலனுக்கு எதிராக இல்லாமல் இருப்பதை உத்திர வாதப் படுத்துதல்' என்பன போன்ற விளக்கங்களின் பின்னால் மறைந்து கொண்டு இலங்கையின் மீதான மேலாதிக்கத்தை இந்திய அரசு தொடர்ந்து நிலைநாட்டி வருகிறது. சர்வதேச அரசியல் பொருளா தார சூழலிலும், தெற்காசியச் சூழலிலும், இலங்கையின் உள்நாட்டு அரசியல் சூழலிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப தங்களது மேலா திக்கத்தை நிறுவிக் கொள்வதற்கு இந்திய ஆளும் வர்க்கங்கள் கடைப் பிடிக்கும் முறைகளில் மட்டுமே மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. இந்த மாற்றத்தையும் மேற்கூறிய சூழல்கள்தான் தீர்மானிக்கின்றனவேயன்றி, தமிழ்த் தேசியவாதிகள் கூறுவது போல ஆட்சி மாற்றமோ அதிகாரி கள் மாற்றமோ இந்திய அரசின் இலங்கைக் கொள்கையை மாற்றி விடவில்லை.

இந்தியாவின் மேலாதிக்கத்துக்கு உட்பட்ட நாடாகவும், அதன் உள் நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகள் தனது நலனுக்கு எதிராக இல்லா தவாறு பேணிக்கொள்ளும் வகையிலுமே, இலங்கை குறித்த இந்தியா வின் கொள்கை இதுவரை இருந்து வருகிறது. சிரிமாவோ - சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இந்திய வம்சாவழியினரான மலையகத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிக்க ஒப்புதல் அளித்து, அவர்களைக் கதறக் கதற இந்தியாவுக்குத் திரும்பக் கொண்டு வந்தது, ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக சிங்கள இனவெறியர்களால் நடத்தப்பட்ட கலவரங்களைக் கண்டுகொள்ளாமலும், கண்டிக்காமலும் இருந்தது, அதேநேரத்தில் ஜே.வி.பி. தலைமையில் நடைபெற்ற எழுச்சியை நசுக்க இராணுவ உதவி செய்தது, கச்சத்தீவைத் தாரை வார்த்தது.. என்பன போன்ற நடவடிக்கைகள் அனைத்துமே இலங்கையைத் தாஜா செய்யும் அணுகுமுறையையே கொண்டிருந்திருக்கின்றன.

தெற்காசியப் பெரியண்ணன் இந்தியாவைச் சமாளிக்கும் நோக்கில், சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் இலங்கை சுமுகமான உறவைப் பேணி வந்ததாலும், 1970 களின் தொடக்கத்திலேயே அமெரிக்க ஆதரவு தாராளவாதப் பொருளாதாரக் கொள்கைகளை இலங்கை பின்பற்றத் தொடங்கி விட்டதாலும், இலங்கை அரசைத் தன் பக்கம்



படிப்பகம்

www.padippakam.com

கவர்ந்திழுக்கும் நோக்கில் இந்த அணுகுமுறையை இந்திய ஆளும் வர்க்கம் மேற்கொண்டிருக்கக் கூடும் என்பதை நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

1983 யூலைக் கலவரத்தையொட்டி ''இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற இராணுவத்தை அனுப்பு'' என்பது தமிழகத்தில் சர்வகட்சி முழக்கமாக இருந்தது. அமைதியை நிலைநாட்ட இந்திய இராணு வத்தை அனுப்புமாறு ஜெயவர்த்தனே அரசு கோரும் என்று, இந்திரா அரசு ஆவலுடன் எதிர்பார்த்தது. அமெரிக்கச் சார்பாக இருந்த ஜெய வர்த்தனே அரசு அவ்வாறு கோரவில்லை. ரசியாவின் ஆப்கான் ஆக்கிர மிப்பைத் தொடர்ந்து அமெரிக்க-ரசியப் பனிப்போர் உச்சத்தில் இருந்த அந்தக் காலகட்டத்தில்தான், ஈழப் போராளிக் குழுக்களைப் பயிற்று வித்து, ஆயுதங்களும் நிதிஉதவியும் அளித்தது இந்திரா அரசு. போராளிக் குழுக்களை உருவாக்கி ஏவி விடுவதன் மூலம் ஜெயவர்த்தனே அரசுக்கு கீழிருந்து ஒரு நிர்ப்பந்தத்தை உருவாக்கி, சமரசம் செய்து வைக்கும் சாக்கில் இலங்கையில் தான் தலையிடுவதற்கான முகாந்திரத்தை ஏற்படுத்திக் கொள்வதே அன்று இந்திய அரசின் நோக்கமாக இருந்தது. இந்த நோக்கத்தின் நிறைவேற்றம்தான் 1987-இல் போடப்பட்ட ராஜீவ் - ஜெயவர்த்தனே ஒப்பந்தம். ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்ற பெயரில், இந்திய அரசு தனது மேலாதிக்க நோக்கங் களை நிறைவேற்றிக் கொண்டிருப்பதை, இந்த ஒப்பந்தத்தின் ஷரத் துக்களைப் படித்துப் பார்ப்பவர்கள் புரிந்துகொள்ள இயலும்.

இந்திய அமைதிப்படையின் ஆக்கிரமிப்புக்கு எதிராக விடுதலைப் புலிகள் நடத்திய போரில் தோற்று, இந்தியப்படை வெளியேறுமாறு பிரேமதாசா அரசே விடுத்த கோரிக்கையால் அவமானப்பட்டு வெளி யேறியது இந்திய இராணுவம். எனினும் இதன் காரணமாகவெல்லாம் தனது மேலாதிக்க நோக்கத்தை இந்திய அரசு கைவிட்டு விடவில்லை. உலகச் சூழ்நிலைகளிலும், தெற்காசியச் சூழலிலும் ஏற்பட்ட மாற்றங் களுக்கு ஏற்ப தனது அணுகுமுறைகளை மாற்றிக்கொண்டது.

மேல்நிலை வல்லரசுகளுக்கிடையிலான பனிப்போர் 1991-இல் முடிவுக்கு வந்தது. அமெரிக்கத் தலைமையில் ஒற்றைத்துருவ உலக ஒழுங்கு நிலைநாட்டப்பட்டது. புவிசார் போர்த்தந்திர மோதல்கள் (Geostrategic conflicts) முடிவுக்கு வந்தன. எல்லாப் பிராந்தியங்களிலும் அமெரிக்க உலக மேலாதிக்க செல்வாக்கு நிலைநாட்டப்படுவது நடந் தேறத் தொடங்கியது. இன்னொரு பக்கம் 1990-களில் உலகமயக் கொள் கைகளும் புகுத்தப்பட்டன. 'தலையீடு, மோதல்கள், தூண்டி விடுதல்'



படிப்பகம்

www.padippakam.com
என்பதற்குப் பதிலாக, 'மோதல்களை முடிவுக்குக் கொண்டு வருதல், 'அமைதி'யை நிலைநாட்டுதல், பொருளாதார ஒத்துழைப்பு, உதவி' என்று அணுகுமுறை மாறியது. இதற்காக வெளியிலிருந்து ஆயுத, அரசியல், இராஜதந்திர ரீதியில் உதவுவது, ஜனநாயகத்தை நிலைநாட்டு தல், அரசியல் தீர்வு என்ற முறைகள் கையாளப்பட்டன.

இந்த இரண்டு முக்கியமான சூழ்நிலை மாற்றங்கள், தெற்காசியப் பிராந்தியத்தில் மேலாதிக்கம் செலுத்திவந்த இந்திய அரசின் அணுகு முறைகளிலும் செயல்பாடுகளிலும் மாற்றத்தைக் கோரின. இலங்கை யின் மீதான இந்தியாவின் மேலாதிக்கப் போக்கிலும், இந்த வகை யான மாற்றம் ஏற்பட்டது. உலகமயக் கொள்கைகளால் கொழுத்துவந்த இந்தியத் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளுக்கும் இந்த மாற்றம் அவசியமாக இருந்தது. பெருகி வந்த முதலீடுகளுக்கு முதலீட்டுக் களம் விரிவடைய வேண்டியிருந்தது. உலகமயமும் அதற்கு ஏதுவாக இருந்தது.

ஒற்றைத்துருவ உலக அமைப்பில், கூட்டுசேராக் கொள்கை என்ற தனது பசப்பல்களையெல்லாம் மூட்டை கட்டிவிட்டு, மிகவும் இயல் பாக அமெரிக்க சரணடைவுக் கொள்கைக்கு இந்திய ஆளும் வர்க்கம் மாறிக்கொண்டது. நேருவின் பெயரால் கூட்டுச்சேராக் கொள்கையை யும், பின்னர் இந்திராவின் ரசிய ஆதரவுக் கொள்கையையும் காட்டி 'ஏகாதிபத்திய எதிர்ப்பாளன்' போலப் பித்தலாட்டம் செய்து கொண் டிருந்த இந்தியாவின் முதன்மையான ஆளும் வர்க்கக் கட்சியான காங்கிரசு, வெளிப்படையான அமெரிக்க ஆதரவுக் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கி, இந்திய ஆளும் வர்க்கத்தின் நிலையைப் பிரதி பலித்தது. 1991-இல் இராக்குக்கு எதிராக அமெரிக்கா தொடுத்த முதல் வளைகுடாப் போரின் போது, அமெரிக்கப் போர் விமானங்கள் இந்தியாவில் எரிபொருள் நிரப்பிக்கொள்ள இடமளித்தது, காங்கிரசின் ஆதரவு பெற்ற சந்திரசேகர் தலைமையிலான பொம்மை அரசு.

தெற்காசியப் பிராந்தியத்தில் பாகிஸ்தானைத் தனது நம்பகமான அடியாளாக அமெரிக்கா வைத்திருந்தது உண்மையே என்றாலும், சீனா வுக்கு மாற்றாகவும், தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட தெற்காசிய மேலாதிக்க சக்தியாகவும் இந்தியாவை அமெரிக்கா அங்கீகரிக்கவே செய்தது. ஆனால் ஈழப்பிரச்சினையில் அமெரிக்கா-பாகிஸ்தான்-இஸ்ரேல் ஆகிய நாடுகள் ஒரு அணியில் இருப்பது போலவும், இந்த அணிக்கும் இந்திய அரசின் நலன்களுக்கும் பகைமுரண்பாடு இருப் பதைப் போலவும் சித்தரித்து இந்திய ஆளும்வர்க்கங்களுக்கு 'அறிவொளியூட்டி' ஈழத்துக்கு ஆதரவாகத் திருப்ப முயன்று



படிப்பகம்

www.padippakam.com

கொண்டிருந்தார்கள் ஈழ ஆதரவாளர்கள். இந்திய ஆளும் வர்க்கங்களோ சிங்களப் பாசிச அரசுக்கு ஆயுதங்களை வாரி வழங்கிக் கொண்டிருந்த பாகிஸ்தானின் பக்கம் இலங்கை சாய்ந்துவிடாமல் தடுத்து, தங்கள் பக்கம் கொண்டு வரும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது.

90-களிலிருந்து தீவிரமாக அமல்படுத்தப்பட்ட தாராளமய, தனியார் மயக் கொள்கைகள், இந்திய ஆளும்வர்க்கமான தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ வர்க்கத்தை மென்மேலும் அமெரிக்காவுக்கு நெருக்க மாகக் கொண்டு சென்றது. தாராளமயக் கொள்கைகளின் விளைவாக அதிவேகமாக அதிகரித்து வந்த இந்தியத் தரகுமுதலாளித்துவ வர்க்கத் தின் இலாபம், முதலீட்டுக்கான வாய்ப்புகளும் புதிய புதிய சந்தை களுக்கான வாய்ப்புகளும் பெருகிவிட்ட சூழல், பன்னாட்டு மூலத னத்துடன் கூட்டுச் சேருவதற்கு இதுகாறும் இருந்துவந்த தடைகள் அகற்றப் படுதல் என்பன போன்ற காரணங்களால் இந்தியத் தரகுமுதலாளித்துவ வர்க்கத்தின் விரிவாக்க ஆசை கொளுந்து விட்டு எரியத் தொடங்கியது. இது இந்தியாவின் இலங்கைக் கொள்கையிலும் பிரதிபலித்தது.

90-களுக்கு முந்தைய இந்திய அரசின் இலங்கைக் கொள்கையில், அதன் மேலாதிக்க நோக்கங்கள் மிகுதியும் அரசியல் ரீதியானவையாக வும் இராணுவ ரீதியானவையாகவுமே இருந்தன என்று கருதலாம். ஆனால் மாறிவிட்ட உலக அரசியல்-பொருளாதார சூழலில், தனது முதலீட்டு விரிவாக்கம் மற்றும் சந்தை விரிவாக்கத்துக்கான களம் என்ற கோணத்தை முதன்மைப்படுத்தி இலங்கையை அணுகத் தொடங்கி யது இந்திய ஆளும் வர்க்கம்.

90-களில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை 'ராஜீவ் கொலையின் விளை வாகத்தான், ஈழத்தமிழர் பிரச்சினையில் அதுகாறும் காட்டிவந்த அக்கறையை இந்தியா காட்டவில்லை' என்பதாகவும், 'நல்லது நினைத்து செய்யப் போய் பொல்லாப்பைத் தேடிக் கொண்டதனால், எதற்கு வம்பு என்று மனம் வெறுத்து ஒதுங்கிக் கொண்ட ஒரு பெரிய மனிதரைப் போலவும்' இந்திய அரசைச் சித்தரித்தன ஆளும்வர்க்கப் பத்திரிகைகள். ராஜீவ் கொலையைத் தொடர்ந்து புலிகளுக்கும், ஈழத் தமிழ் மக்களுக்கும் எதிராக இங்கே உருவாக்கப்பட்டிருந்த பொதுக் கருத்தும் இதற்கு உதவியாக இருந்தது.

பூனை ஒன்றும் அப்படியெல்லாம் கருவாட்டை வெறுத்து விட வில்லை. மாறிய சூழ்நிலைக்கு ஏற்ப தனது நலனை இலங்கையில் பேணுவதற்கு இந்திய ஆளும்வர்க்கம் வகுத்திருந்த திட்டம் 1998-இல்



படிப்பகம்

இலங்கையுடன் இந்தியா போட்டுக்கொண்ட தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தில் பிரதிபலித்தது. மூர்க்கமான மேலாதிக்கக் கொள்கையின் காரணமாக இந்திய-இலங்கை வர்த்தகத்தில் இலங்கைக்குப் பாதகமாக ஏற்பட்டிருந்த பாரிய ஏற்றத்தாழ்வைச் சரிசெய்யும் நோக்கத்திலும், இலங்கைக்கு சலுகை வழங்கிக் கவர்ந்திழுக்கும் நோக்கத்திலும் வகுக்கப்பட்டிருந்த இந்தக் கொள்கை, இந்தியாவுக்கான இலங்கையின் ஏற்றுமதியைப் பன்மடங்கு அதிகரிக்க உதவியது. இலங்கையின் வர்த்தகப் பற்றாக்குறையையும் குறைத்தது.

ஈழ ஆதரவாளர்களின் மொழியில் கூற வேண்டுமாயின், சிங்கள பிரேமதாசா அரசு பகிரங்கமாக வெளியேறச் சொன்னதால் அவமானத்துக்கும், இந்திய அமைதிப்படைக்கு எதிராகப் புலிகள் தொடுத்த போருக்கு பிரேமதாசா அரசு இரகசியமாக ஆயுத உதவி செய்ததை அறிந்ததால் ஆத்திரத்துக்கும் ஆட்பட்டிருந்த இந்திய அரசுதான் 'மான அவமானம் பார்க்காமல்' இலங்கை அரசுக்குச் சலுகைகளை வாரி வழங்கியது. 'ஈழ எதிர்ப்பு, சிங்களப் பாசிச அரசுக்கு ஆதரவு' என்ற கொள்கையிலும் ஐ.கே. குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் கடுகளவும் மாறவில்லை.

ஆட்சிகள் மாறினாலும் இந்திய அரசின் இலங்கைக் கொள்கை மாறவில்லை. இலங்கைக் கொள்கையில் இந்தத் தொடர்ச்சி வாஜ்பாய் அரசிலும் பிரதிபலித்தது. எனினும் தி.மு.க, ம.தி.மு.க, பா.ம.க முதலான ஈழ ஆதரவுக் கட்சிகளின் துணையுடன் பா.ஜ.க-வின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி அமைந்தவுடன், பாரிய கொள்கை மாற்றம் ஏற்படுமென புலிகளும், அவர்களது ஆதரவாளர்களும் கருதினர். புலிகள் இயக்கத்தின் ஆலோசகர் ஆண்டன் பாலசிங்கம் கீழ்க்கண்டவாறு அறிவித்தார்:

''இப்போது புதிய ஆட்சியாளர்கள் வந்து விட்டார்கள். இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறையுள்ளவர்கள் பா.ஜ.க அரசின் அங்கமாக உள்ளனர். கொழும்பிலுள்ள சிங்கள அரசுக்கு ஆதரவாக இந்தியா ஒரு போதும் தலையீடு செய்யாது. தமிழ் ஈழம் அமைந்தால் அங்கு உதயமாகும் அரசு, இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் மிகமிக நெருக்கமான கூட்டாளியாக இருக்கும். இந்தியாவின் வளையத்திலேயே அது சுழலும். இந்தியாவின் நெருக்கமான, உறுதியான பிராந்தியக் கூட்டாளியாக இருப்போம் என்பதை வெளிப்படையாக உறுதி கூறுகிறேன். இதைப் பிரகடனப்படுத்தும்படி எங்கள் தலைவரே எனக்கு அதிகாரமளித்திருக்கிறார்'' என்று இந்திய ஆளும்வர்க்கத்துக்கும், அரசுக்கும் உறுதியளித்தார். வைகோ, நெடுமாறன் உள்ளிட்ட புலிகள் இயக்க



படிப்பகம்

www.padippakam.com

ஆதரவாளர்களும் இதே வகையான உறுதியை இந்திய அரசுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறார்கள் எனினும், இதனாலெல்லாம் இந்திய அரசின் இலங்கைக் கொள்கை மாறி விடவில்லை.

தி.மு.க, பா.ம.க, ம.தி.மு.க-வினர் வாஜ்பாயின் அமைச்சரவையில் அங்கம் வகித்த பா.ஜ.க ஆட்சிக்காலத்தில், மே 2000-இல் யாழ் தீபகற்பத்தில் நிலைகொண்டிருந்த 40,000 இலங்கை இராணுவ சிப்பாய்கள் புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டனர். உடனே விண்கோள்கள் மூலம் உளவு பார்த்து புலிகளின் நடமாட்டம் குறித்து தகவல் அளிப்பதாக இலங்கை அரசுக்கு இந்திய அரசு உறுதி கூறியது. புலிகளின் நிலைகளின் மீது விமானத்தாக்குதல் தொடுப்பதற்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு இந்திய விமானப்படை தளபதி டிப்னிஸ் நேரடியாக இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டார். இரகசியக் கொலைக்குழுக்களை உருவாக்கி காலிஸ்தான் இயக்கத்தை ஒழித்த கே.பி.எஸ் கில் என்ற போலீசு அதிகாரி, இலங்கை அரசுக்கு உதவும் பொருட்டு அனுப்பி வைக்கப்பட்டார். இலங்கைக்குப் பறந்துசென்ற வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங், அங்கிருக்கும் துரோகக் குழுக்களுடனும் இலங்கை அரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, ராஜீவ்-ஜெயவர்த்தனே ஒப்பந்தத்தை உடனே அமல்படுத்த வலியுறுத்தினார். இதன் பொருட்டு இலங்கை அரசுக்கு 400 கோடி ரூபாய் உதவியை அறிவித்தார். இறுதியாக, இந்திய விமானப்படையும் கப்பற்படையும் தயார் நிலையில் இருப்பதாகவும், புலிகள் முற்றுகையை விலக்கிக் கொள்ளாவிட்டால், 40,000 சிங்களச் சிப்பாய்களை மீட்கும் நோக்கத்தில் 'மனிதாபிமானத் தலையீடு' செய்யப் போவதாகவும் வாஜ்பாய் அரசு அறிவித்தது. இவற்றின் விளைவாக முற்றுகையை விலக்கிக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு புலிகள் ஆளாகினர்.

புலிகள் வெற்றி முகத்தில் இருந்த அந்தச் சூழ்நிலையில், ''செக்கோஸ்லோவாகியா பாணி உட்பட ஏதோ ஒரு வகையில் ஈழப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும்'' என்று மறைமுகமாக ஈழப் பிரிவினையைச் சிபாரிசு செய்து கருணாநிதி பேசினார். உடனே, மத்திய அமைச்சர் முரசொலி மாறனைக் கூப்பிட்டுக் கண்டித்த வாஜ்பாய், ''புலிகள் தனி ஈழம் பிரகடனம் செய்தால் இந்தியா ஒருபோதும் அதை அங்கீகரிக்காது'' என்று உறுதிபட அறிவித்தார். ''கருணாநிதி தெரிவித்தது அவரது தனிப்பட்ட கருத்து'' என்று கூறி ஜகா வாங்கினார் மாறன்.

எனினும், இந்திய அரசின் மேற்கூறிய நடவடிக்கைகள் அனைத்தும் ஈழத்தமிழருக்கு ஆதரவானவை என்று கூறி, கருணாநிதி, வைகோ, ராமதாசு முதல் நெடுமாறன் வரையிலான அனைவரும் அன்று



படிப்பகம்

www.padippakam.com

வாஜ்பாய் அரசை ஆதரித்தனர். தமிழகக் கட்சிகளின் தயவில்தான் வாஜ்பாய் அரசு பதவியில் இருந்தது என்ற போதிலும், இந்திய ஆளும் வர்க்கத்தின் நிலையைத்தான் 'தமிழகத்தின் ஈழ ஆதரவுக் கட்சிகள்' பின்பற்ற வேண்டியிருந்ததேயொழிய, இந்திய ஆளும்வர்க்கம் ஈழ ஆதரவுக் கொள்கைக்கு மாறி விடவில்லை என்பதற்கு இது துலக்க மான சான்று.

தமிழகத்தின் 'ஈழ ஆதரவு' கூட்டணிக் கட்சிகளின் தயவை நம்பி யிருந்த இதே வாஜ்பாய் ஆட்சிக்காலத்தில்தான் இலங்கை அரசுடன் இந்திய அரசு இராணுவ உறவுகளை மேம்படுத்திக் கொண்டது. ஆயி ரக்கணக்கான சிங்கள இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சியும் அளிக்கப்பட்டது. இந்த 'நட்புறவின் அங்கமாக' இலங்கையுடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தீவிரமாக அமலாக்கப்பட்டது. இந்திய இலங்கை வணிகம் பன்மடங்கு அதிகரித்தது. இந்தியத் தரகுமுதலா ளிகளின் முதலீடுகளும் இலங்கையில் அதிகரித்தன.

இவ்வாறு இந்திய மேலாதிக்கம் தனது உறுதியான ஈழ எதிர்ப்பு நிலையைப் பலமுறை நிரூபித்திருந்தபோதும், இந்தியாவை நட்பு நாடாகவே கருதி இராணுவ பலத்தின் மூலம் ஈழத்தை நிறுவி விட்டால், இந்தியாவின் அங்கீகாரத்தை எப்படியாவது பெற்றுவிட முடியும் என்றே புலிகளும் அதன் ஆதரவாளர்களும் மனப்பால் குடித்து வந்த னர். இந்த அடிப்படையில்தான் 2000 இல் புலிகள் பெற்ற தொடர்ச்சி யான இராணுவ வெற்றிகளைக் காட்டி தனி ஈழம் விரைவிலேயே அமைந்துவிடும் என்றும் நம்பினர்.

கண் கொண்டு பார்க்கத் தவறுவதால் சர்வதேச அரசியல் பொருளா தாரச் சூழல்களில் ஏற்படும் மாற்றங்களிலிருந்து எந்த நாடும், இயக்க மும் தப்பி விடுவதில்லை. இரட்டைக் கோபுரத் தாக்குதலைத் தொடர்ந்து 'பயங்கரவாத எதிர்ப்பு' என்ற பெயரில் தனது உலக மேலா திக்கத் திட்டத்தை அமல்படுத்தத் தொடங்கியிருந்த அமெரிக்க வல்ல ரசு, இசுலாமியத் தீவிரவாத இயக்கங்களை மட்டுமின்றி, எல்லா வகை யான ஆயுதம் தாங்கிய விடுதலை இயக்கங்களையும் பயங்கரவாதப் பட்டியலில் சேர்க்கத் தொடங்கியது. புலிகள் இயக்கமும் பல நாடு களில் தடை செய்யப்பட்டது. இராணுவ ரீதியில் வெற்றி பெற்றிருந்த போதும், போர் நிறுத்தத்தையும் அமைதிப் பேச்சுவார்த்தையையும் ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு 2002-இல் புலிகள் தள்ளப்பட்டனர். இதற்குக் கீழ்க்கண்டவாறு விளக்கமளித்தார் ஆண்டன் பாலசிங்கம்.



படிப்பகம்

www.padippakam.com

''எமது பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை அல்ல... இன்று ஒரு சர்வதேசப் பிரச்சினையாக உலக வல்லரசுகளினதும் பிரதேச வல்லரசுகளினதும் கவனத்தை, தலையீட்டைக் கொண்டுள்ள ஒரு சிக்கலான உலகப் பிரச்சினை; சர்வதேச நெருக்கடி. ஆகவே நாங்கள் குறுகிய நோக்குடன் காய் நகர்த்தவில்லை. சகல சர்வதேச பரிமாணங் களையும் கணக்கிலெடுத்து, அவற்றின் தாற்பரியங்களை உணர்ந்து சர்வதேச உறவுகளை ஆழமாகப் பரிசீலனை செய்து ஒவ்வொரு காய்களையும் நகர்த்திக் கொண்டிருக்கிறோம்.''

''எங்களுடைய இலட்சியம் தமிழீழத் தனியரசு. இந்தத் தனியரசை ஏற்றுக்கொள்ள விரும்பாத பட்சத்தில், அரசே ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைக்கட்டும். தமிழர் தாயகம், தமிழர் தேசியம், தமிழர் தன்னாட்சி உரிமை என்ற இந்த மூன்று அடிப்படைகளை ஏற்றுக் கொண்ட ஒரு தீர்வுத் திட்டத்தை சிங்கள தேசம் முன் வைத்தால், நாங்கள் அதைப் பரிசீலனை செய்வோம்''

''இடைக்கால அரசு அமைக்கப்பட்டு வடகிழக்கின் நிர்வாகம் புலி களிடம் ஒப்படைக்கப்பட்டால், உலக நாடுகள் வட கிழக்கில் ஏகப் பட்ட பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை செயல்படுத்துவதற்கு பெருமளவு உதவி வழங்கத் தயாராக இருக்கின்றன. இது எமக்கு நேரடியாகச் சொல்லப்படுகின்றது.... இந்த நிதி உதவியைப் பெற்று எமது மக்களின் பொருளாதார வாழ்வை மேம்படுத்த நாம் முடிவு செய்திருக்கிறோம்.'' என்று கூறினார் பாலசிங்கம்.

போர்நிறுத்தம் சமாதான முன்னெடுப்பு என்பனவற்றின் அங்க மாக இந்தக் காலகட்டத்தில் ஏகாதிபத்தியங்களால் அறிமுகப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் என்பவையெல்லாம், ஈழம் உள்ளிட்ட இலங்கை முழுவதையுமே மறுகாலனியாக்கப் பாதையில் விரைந்து இட்டுச் செல்வனவாகவே இருந்தன. அமெரிக்காவுடன் இலங்கை அரசு செய்துகொண்ட சுதந்திர வான்வெளி ஒப்பந்தம், இலங்கையின் வான் வெளி எல்லைக்குள் எவ்விதத் தடையுமின்றி அமெரிக்க விமானங் கள் பறந்து செல்லவும், விமான நிலையங்களைப் பயன்படுத்தவும் உரிமை வழங்கியது. இலங்கை இராணுவத்துக்கு ஆயுதமும் பயிற்சி யும் வழங்க வழிவகுக்கும் அமெரிக்க இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் தயாரானது. அமெரிக்கா, ஐரோப்பிய யூனியன், ஜப்பான் ஆகிய நாடு களுடன் விரிவான பொருளாதார ஒப்பந்தங்கள் கையெழுத்திடுவதற் கான அடித்தளமிடப்பட்டது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் காலத்தில்தான் திரிகோணமலையின் எண்ணெய்க் குதங்கள் இந்தியாவுக்குத் தரப்பட்டன. தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையில் பாலம் அமைத்து, அங்கிருந்து திரிகோணமலைக்கு நெடுஞ்சாலை அமைக்கும் பணி இந்தியாவுக்குக் கையளிக்கப்பட்டது. இலங்கை-இந்திய வர்த்தக ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட்டது. காங்கேசன் துறை சிமெண்டு ஆலைகளும், துறைமுகமும் இந்தியாவுக்குக் கையளிக் கப்பட்டன. இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் அதிரடிப் படை போலீசுக்கு இந்தியாவில் பயிற்சி தர ஒப்பந்தம் கையெழுத் தானது. இலங்கையில் பயங்கரவாத ஒழிப்புக்கு இராணுவ ஒத்துழைப்பு தரக்கூடிய 'கடல் பிராந்திய ஒப்பந்தம்' சீனாவுடன் செய்து கொள்ளப் பட்டது.

இலங்கை அரசு கையெழுத்திட்ட மேற்கூறிய ஒப்பந்தங்கள் எது வும் புலிகள் இயக்கத்துக்குத் தெரியாமல் இலங்கை அரசு செய்து கொண்ட இரகசிய ஒப்பந்தங்கள் அல்ல. இவை நாடறிந்தவை. புலி களின் ஒப்புதலுடன் மேற்கொள்ளப்பட்டவை. ஈழம் உள்ளிட்ட இலங்கை முழுவதையும் ஏகாதிபத்தியங்களின் பிடியிலும், இந்திய மேலாதிக்கத்தின் பிடியிலும் கொண்டு வரும் வகையில் போடப்பட்ட இந்த ஒப்பந்தங்கள் ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிரானவை என்பதை விளக்கத்தேவையில்லை.

இந்த ஒப்பந்தங்களைத் தொடர்ந்து இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் முதலீடுகள் மட்டுமின்றி, பன்னாட்டு நிறுவனங்களின் முதலீடுகளும், சீனாவின் முதலீடுகளும் இலங்கையில் அதிகரித்தன இதனைத் தொடர்ந்து வளர்ச்சித் திட்ட உதவி என்ற பெயரில் ரூ.10,000 கோடியை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது இந்திய அரசு. ரூ. 25,000 கோடி அளவில் இந்தியத் தரகு அதிகார வர்க்க மூலதனமும் இலங் கையில் நுழைந்துள்ளது.

தங்களது முதலீடுகளுக்குத் தேவையான பாதுகாப்பு, தொழிலுக் குத் தேவைப்படுகின்ற அமைதி, தங்களது இலாபத்தை உத்திரவாதப் படுத்தும் சட்டதிட்டங்கள், அவற்றை உறுதி செய்யும் அரசமைப்பு என்பனவற்றுக்கான உத்திரவாதமில்லாமல், இந்திய ஆளும் வர்க்கமோ ஏகாதிபத்தியங்களோ தங்களது மூலதனத்தை எந்த நாட்டிலும் பணயம் வைப்பதில்லை. மிகுந்த தொலைநோக்குடன் அவற்றை உத்திரவாதம் செய்து கொள்கிறார்கள். ஒருவேளை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நாட்டின் அரசாங்கம் தங்களது நலனுக்கு எதிராகப் போனால், அதனை மறுகணமே கவிழ்க்கவும் செய்கிறார்கள். இந்த முதலீடுகள்,



படிப்பகம்

www.padippakam.com

இராணுவ ஒப்பந்தங்களைத் தனியொரு பிரச்சினையாகவும், ஒன்று பட்ட இலங்கையா தனி ஈழமா என்பதை இதற்குத் தொடர்பற்ற அரசியல் பிரச்சினையாகவும் புரிந்து கொள்வது அரசியல் பாமரத்தனம்.

இப்படி இலங்கைக்குள் இந்திய, சீன, அமெரிக்க முதலீடுகளும் தலையீடுகளும் முன்னிலும் அதிகமாகப் பெருகிவிட்ட சூழ்நிலையில் தான் ராஜபக்சே அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான முறுகல் நிலை தோன்றியது. தனி ஈழம் இந்தியாவின் ஆணைகளுக்குக் கட்டுப்படும் என்றும் இந்தியாவின் நலனைப் பிரதிபலிக்கும் என்றும், புலிகள் இயக்கம் எத்தனை முறை வலியுறுத்தி சத்தியம் செய்த போதிலும், இந்திய ஆளும் வர்க்கங்கள் ஈழம் அமைவதை விரும்பவில்லை என்பதே எதார்த்தம். இப்படியொரு தீர்வை இந்திய ஆளும் வர்க்கங் களின் மீது திணிப்பதற்கு அமெரிக்காவுக்கும் எந்தவித முகாந்திரமும் இல்லை. தெற்காசிய பிராந்தியத்தில் தனது இராணுவக் கூட்டாளியாக இந்தியாவை வளர்க்க வேண்டும் என்பதுதான் அமெரிக்காவின் திட்டம். இந்தியாவின் பிராந்திய நலன் குறித்த விவகாரத்தில் தலை யிட்டு, ஈழத்தை ஆதரிக்குமாறு கட்டாயப்படுத்துவதற்கு அமெரிக்கா வுக்கு எந்தவித அவசியமும் இல்லை.

மேலும், சீனா தனது முதலீடுகள் மற்றும் பொருளாதார, இராணுவ உதவிகள் மூலம் இலங்கையைத் தன் பக்கம் கவர்ந்திழுக்க முயன்று வரும் சூழலில், அமெரிக்காவோ மேலை ஏகாதிபத்திய நாடுகளோ ஈழத்துக்கு ஆதரவாக இலங்கையில் தலையிடுவதற்கான சாத்தியங்கள் அருகியிருந்தன என்பது மட்டுமல்ல, அவை சிங்கள அரசுக்குத் துணை நிற்பதற்கான காரணிகள் மிகுந்திருந்தன என்பதே உண்மை. மேலும் தற்போது சீனாவும் ரசியாவும் இலங்கை அரசுக்கு அளித்து வரும் தீவிர ஆதரவுக்கு புதிய உலக நிலைமைகளும் காரண மாக இருக்கின்றன.

தற்போது ராஜபக்சே நடத்திவரும் இன அழிப்புப் போரின் விளைவாக ஏற்பட்டுள்ள மனிதப் பேரழிவைத் தடுப்பது என்ற நோக் கத்தில் அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் ஐ.நா.வில் மேற் கொண்ட முயற்சிகளை சீனாவும், ரசியாவும் இணைந்து முறியடித்து வருகின்றன. இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் வெளியார் யாரும் தலையிட முடியாது என்று கூறி ராஜபக்சே அரசுக்கு ஆதர வாக நிற்கின்றன. இது மாறிவரும் சர்வதேசச் சூழ்நிலைகளின் ஒரு பிரதிபலிப்பாகும்.



படிப்பகம்

www.padippakam.com

ஆப்கான், இராக் ஆக்கிரமிப்புகளைத் தொடர்ந்து ஆசியாவில் தனது தளங்களையும் செல்வாக்கையும் நிறுவ விரும்பும் அமெரிக்கா வுக்கு எதிராக சீனாவும், ரசியாவும் இணைந்து 'ஷாங்காய் கூட்டுறவு அமைப்பை' உருவாக்கின. இதில் உறுப்பினராக இணைந்து கொள் ளுமாறு ரசியாவும், சீனாவும் விடுத்த கோரிக்கையை நிராகரித்து, அமெ ரிக்காவுடன் இராணுவ ஒப்பந்தம் செய்து கொண்டது மன்மோகன் அரசு. அமெரிக்காவின் உலக மேலாதிக்கத்துக்கு எதிர் நடவடிக்கை யாக உருவாக்கப்பட்டுள்ள இந்த ஷாங்காய் கூட்டுறவில், மத்திய ஆசிய நாடுகள் அங்கம் வகிக்கின்றன. சீனா, ரசியா, மத்திய ஆசிய நாடுகள், வட கொரியா போன்றவை ஒரு அணியாகவும், இந்தியா, ஜப்பான், தென்கொரியா போன்ற நாடுகள் அமெரிக்க ஆதரவு அணியாகவும் இணைந்து வருகின்றன. தெற்காசிய நாடுகளான இலங்கை, பாகிஸ் தான், நேபாளம் போன்றவற்றைத் தம் பக்கத்துக்கு இழுக்க இருதரப் புகளுமே முயன்று வருகின்றன. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உள்ள முறுகல் நிலையைச் சரி செய்து இந்தியா - பாக். - ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை தலிபான் எதிர்ப்பு நடவடிக்கை களில் கூட்டாக இறக்கி விட அமெரிக்கா முயல்கிறது. இதுவரை இல்லாத முறையில், ஜப்பான் கடற்பகுதியில் இந்தியக் கடற்படை கூட்டு இராணுவப் பயிற்சியில் ஈடுபட்டு சீனாவின் ஆத்திரத்தைத் தூண்டியிருக்கிறது.

அதேநேரத்தில், வளர்ந்து வரும் தனது பலம் காரணமாகவும் அமெரிக்க மேல்நிலை வல்லரசின் விழுந்து வரும் செல்வாக்கு கார ணமாகவும், சீனா அண்மைக்காலமாக தெற்காசிய மற்றும் ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தனது அரசியல், பொருளாதாரச் செல்வாக்கைப் பரப்ப முயற்சித்து வருகின்றது, குறிப்பாக தெற்காசியப் பிராந்தியத்தில். இதன் ஒரு பகுதியாக இந்துமாக் கடலில் தனது கப்பற்படை பலத்தைப் புதிதாக நிலைநாட்ட வருகின்றது. பாகிஸ்தானைத் தமது நம்பகமான கூட்டாளியாக வைத்துக் கொண்டு சார்க் நாடுகளில் தனது மேலாதிக்கத்தைச் செலுத்த இந்தியாவுடன் போட்டி போடுகின்றது.

சீனாவின் இந்த மேலாதிக்க முயற்சிகளை இந்தியாவைக் கொண்டு முறியடிக்க, அமெரிக்காவானது இந்தியாவை தனது தெற்காசியப் பிராந்திய அடியாளாக மாற்றியுள்ளது. 2005 இந்திய-அமெரிக்க இராணுவ ஒப்பந்தம், அணுசக்தி ஒப்பந்தம், இஸ்ரேலுடன் நெருங்கிய இராணுவத் தளவாட வர்த்தக உறவு போன்றவை இதற்கான எடுத்துக் காட்டுகள். இந்திய-சீன பிராந்திய மேலாதிக்கப் போட்டி ஏற்கெனவே



படிப்பகம்

www.padippakam.com

சில விசயங்களில் வெளிப்பட்டும் உள்ளது. 2009 ஏப்ரல் மாதத்தில், கடற்கொள்ளைக்கு எதிரான நடவடிக்கைகளுக்காக ஏடன் வளைகுடா நோக்கிச் சென்று கொண்டிருந்த சீன போர்க்கப்பல்களை இந்திய கடற் படையின் நீர்மூழ்கி ஒன்று பின்தொடர்ந்து வந்ததாகவும், அதைக் கட்டாயப்படுத்தி நீருக்கு மேலே கொண்டு வந்ததாகவும் சீன மக்கள் இராணுவத்தின் கப்பற்படை தெரிவித்திருந்தது. இந்தியா இதை மறுத்துள்ளது. ''26.11.08 அன்று மும்பையில் தாக்குதல் நடத்திய முசுலீம் தீவிரவாதிகள் இந்தியாவைச் சேர்ந்தவர்களே'' என்று சீன அரசால் நடத்தப்படும் 'நிகழ்கால சர்வதேச உறவுகளுக்கான சீன நிறு வனம்' தெரிவித்துள்ளது. மேலும், 26/11 தாக்குதலையொட்டி இந்திய - பாக். போர் ஏற்பட்டால், அப்போரில் சீனாவானது 'பாகிஸ்தானை உறுதியாக ஆதரிக்கும்' என்று சீன அரசின் வெளியுறவுத்துறை அமைச் சகம் நடத்தும் 'போர்த்தந்திர ஆய்வுகளுக்கான சீன நிறுவனம்' எச்சரித் திருந்தது. (பார்க்க: ஜி. பார்த்தசாரதி எழுதியுள்ள' ''26/11-க்குப் பிறகு அதிகரித்து வரும் சீனப் பகைமையை இந்தியா எதிர்கொண்டுள்ளது'', பிசினஸ்லைன், 19.3.09)

'மேலும், இந்தியப் பெருங்கடலை இனிமேலும் இந்தியர்களின் கடல் என்று ஒத்துக்கொள்ள முடியாது' என்று சீன மக்கள் இராணு வம் அறிவித்துள்ளது. ''இந்தியாவின் அந்தமான் மற்றும் நிக்கோபர் தீவுகளை ஒரு உலோகச் சங்கிலியாக பயன்படுத்தி மலாக்கா நீரிணைக்கு (straits) சீனா வருவதைத் தடுக்க முடியும்'' என்றும் சீன கடற்படை ஆய்வாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த மாதிரியான வாதங்களை முன்வைத்து இந்தியப் பெருங்கடல் பகுதியில் தனது கடற் படையை வலுப்படுத்திக் கொண்டு வருகின்றது சீனா, என்கிறார் பார்த்தசாரதி. பாரசீக வளைகுடாவின் வாய்போல இருக்கும் பகுதி யில் பாகிஸ்தான் கடற்பகுதியில் உள்ள மக்ரன், குவாடர் ஆகிய இடங் களில் சீனா தனது கடற்படைத் தள வசதிகளைப் பெற்றுள்ளது. இது போன்று இந்துமாக்கடலில் இந்தியாவைச் சுற்றி வளைக்கவும், முடக்கவும் இவை போன்று பல தளங்களை அமைக்க சீனா போர்த் தந்திர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தெற்குப் பகுதியில் உள்ள ஹேம்பன்தோடா (Hambantota) என்ற துறைமுகத்தில் எரிபொருள் நிரப்பும் நிலையம் ஒன்றை சீனா அமைத்து வருகின்றது. பங்களாதேசின் சிட்டகாங் துறை முகத்திற்கு வணிக மற்றும் கப்பற்படை நோக்கங்களுக்கு வந்து செல்லும் வசதியை சீனா பெற்றுள்ளது. மேலும் மியான்மர் வழியாக



படிப்பகம்

www.padippakam.com

யுன்னான் பிராந்தியத்துடன் சிட்டகாங்கை இணைக்கவும் திட்ட மிட்டுள்ளது. வணிக நோக்கங்களுக்காகவே இத்துறைமுகம் கட்டப் படுகிறது என்று சீனா சொன்னாலும், உண்மையில் இந்தியாவின் புழக் கடையில் சீனக் கப்பற்படை வலிமையைப் பெருக்கிக் கொள்ளவும் இதைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இவை எல்லாவற்றையும் விட, இலங்கைக் கடற்பகுதியில் சீன கடற்படை நிற்க இலங்கை அனுமதித்தால், இந்தியப் பெருங்கடல் பகுதியில் இந்தியாவைச் சீனா சுற்றி வளைப்பது ஒரு எதார்த்தமாகி விடும். ஏற்கெனவே பங்களாதேசத்திலும், மியான்மரிலும் சீனா கணிசமாக ஊடுருவியுள்ளது. மாலத்தீவில் ஒரு கடற்படைத் தளத்தை யும் சீனா பெற்றுள்ளது.

சீனாவும் இலங்கையும் பல இராணுவ ஒப்பந்தங்களைப் போட் டுள்ளன. ஆயுதம் வழங்குவதையே அவை மையமாகக் கொண் டுள்ளன. பல நவீனரக ஆயுதங்களை சீனா தொடர்ந்து இலங்கைக்கு அளித்து வருகின்றது. இதேபோல் பாகிஸ்தானும் ஏராளமான ஆயு தங்களை இலங்கைக்கு வழங்கி வருகின்றது. விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு தலைவர் தமிழ்ச்செல்வனைக் கொன்ற MK82 மற்றும் MK83 வான்வெளிக் குண்டுகளை வழங்கியது பாகிஸ்தான் தான்! பாகிஸ்தானிலிருந்து 2008-ஆம் ஆண்டிலிருந்து ஆண்டுக்கு 400 கோடி ரூபாய்க்கு இலங்கை ஆயுதங்களை வாங்கி வருகின்றது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிக்கொள்ளத் தேவையான ஆயு தங்களை வழங்க பாகிஸ்தானும் சீனாவும் உத்திரவாதமளித்துள்ளன.

ஆனால் இந்த ஆயுதங்களை ஏராளமான விலை கொடுத்துதான் இலங்கை வாங்குகிறது. இதனால் அந்நாட்டின் பொருளாதார ஆதா யங்கள் மறுமுதலீட்டிற்கோ அதன் மூலமான அதிகரித்த பொருளா தார வளர்ச்சிக்கோ செல்லாமல், விண்ணை முட்டும் விலை கொடுத்து வாங்கப்படும் ஆயுதத் தளவாடச் செலவிற்கு பிரதானமாகச் செல்கின் றன. இது இலங்கையின் பொருளாதாரத்தை மேலும் பலவீனப்படுத்தி ஆரோக்கியத்தைக் கெடுத்து வருகின்றது. பொருளாதார ரீதியில் இலங் கையைச் சுரண்ட நினைக்கும் இந்தியத் தரகு அதிகார வர்க்கத்தின ருக்கு இது பெருத்த கவலையை அளித்து வருகின்றது.

சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் இலங்கை போட்டுள்ள இரா ணுவ ஒப்பந்தங்களின் காரணமாக, இந்தியா இலங்கையுடனான தனது போர்த்தந்திர உறவுகளை எவ்வளவுதான் நெருக்கமாக வைத்துக் கொண் டாலும் அதன் காரணமாக இலங்கை பிராந்திய சக்திகளுடனோ, உலக



படிப்பகம்

www.padippakam.com

சக்திகளுடனோ உள்ள தனது உறவுகளை விட்டுவிடாது. எடுத்துக்காட்டாக, இந்தியாவிற்கு அளிக்கப்பட்ட எண்ணெய் ரிசர்வ்-களுக்கு அருகிலேயே சீனக் கம்பெனி ஒன்றுக்கு ரிசர்வ்களை அளித்திருக்கிறது இலங்கை அரசு. வரலாற்று ரீதியாகவே, பாகிஸ்தானுடனும் சீனாவுடனுமான இலங்கையின் இருதரப்பு உறவுகள், இந்திய-இலங்கை இருதரப்பு உறவை விட சிறப்பாகவே இருந்து வந்துள்ளன. எனினும், இந்திய-இலங்கை உறவைப் பொருத்தவரையில், அது இலங்கைக்கு மிகவும் ஆதாயம் அளிப்பதாகவே இருந்து வந்துள்ளது. எனவே, இந்தியாவுடனான உறவைப் பேணி வரும்போதே, பிற நாடுகளுடனான உறவைப் புறந்தள்ள இலங்கை முயலாது என்பதே உண்மை. இந்நிலைமையில் இலங்கையுடனான பொருளாதார உறவுகளை மேலும் விரிவுபடுத்தி, திடப்படுத்திக் கொள்வதன் மூலமே இலங்கையின் வெளியுறவுக் கொள்கை மீது சீனாவையும், பாகிஸ்தானையும் காட்டிலும் செல்வாக்குச் செலுத்த முடியும் என இந்திய ஆளும் வர்க்கங்கள் கருதுகின்றன.

சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் போட்டி போட்டுக் கொண்டு தாக்குதல் ஆயுதங்களை இலங்கைக்குக் கொடுக்கவே இந்திய அரசு விரும்புகிறது. இருப்பினும், தமிழ்நாட்டில் இது தொடர்பாக எழும் அரசியல் உணர்ச்சிக் கொந்தளிப்புகளுக்கு அஞ்சி தரத் தயங்குகிறது. அல்லது வரம்புக்குட்பட்ட அளவில் மிகமிக இரகசியமாகத் தருகிறது; மற்றபடி இலங்கை இராணுவத்திற்கு பயிற்சியளிப்பது, இராணுவ வல்லுநர்களைக் களத்திற்கு அனுப்புவது, செயற்கைக் கோள்கள் மூலம் உளவறிந்து உதவுவது போன்ற வேலைகளை இந்தியா செய்துதான் வருகின்றது. தமிழினப் படுகொலையை நடத்துவதற்கும் போராட்ட உணர்வே அற்றுப்போகும்படி அடக்குமுறையை இலங்கை அரசு ஏவி விடுவதற்கும் அரசியல், இராஜதந்திர முறைகளில் ஆதரவு அளித்து அண்ணன் போல செயல்படுகிறது இந்திய அரசு. ஏராளமான பொருளாதார உதவிகளையும் இலங்கை அரசுக்கு சாதகமான முறைகளில் வழங்குகின்றது.

இலங்கை அரசின் மீது சீனா-பாகிஸ்தானின் செல்வாக்கு ஓங்கி விடக் கூடாது என்பதிலும், இலங்கை தனது மேலாதிக்கக் கட்டுப்பாட்டிலிருந்து விலகி விடக் கூடாது என்பதிலும் இந்தியா குறியாக இருந்த போதிலும், இலங்கை அரசை மிரட்ட முடியாத நிலையிலும் இந்தியா உள்ளது. விடுதலைப் புலிகளைத் தன் பக்கம் வைத்துக் கொண்டு மிரட்டினால், இன்றைய உலக, தெற்காசியப் பிராந்திய சூழ்நிலையில் இலங்கை அரசு அதற்கு அடிபணியும் நிலையில் இல்லை;



படிப்பகம்

மீறிக் கொண்டு சீனா பக்கம் சாய்ந்து விடும் நிலையில் உள்ளது. அப்படி சாய்ந்து விட்டால், இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளி களின் பொருளாதார நலன்கள் மிகப்பெரும் அளவில் பாதிக்கப்படும். எனவே, ராஜபக்சே அரசைக் கொஞ்சிக் கெஞ்சியும், பொருளாதார உதவிகளை அதிகமாக அளித்துமே இந்திய அரசு இலங்கை அரசைத் தனது மேலாதிக்கப் பிடியில் வைத்துக்கொள்ள முயற்சிக்கிறது.

இன்னொரு கோணத்தில், விடுதலைப் புலிகளை இந்திய அரசு ஆதரித்தால், அது இந்தியாவிலும் தனி நாடு கேட்கும் இயக்கங்களை அரசியலில் உசுப்பி விட்டு, இந்து-இந்தி-இந்திய தேசியத்திற்கு ஆபத் தாக முடியும் என்ற அச்சமும் இந்திய ஆளும்வர்க்கத்துக்கு உள்ளது.

எனவே, ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட் டத்தை இந்திய ஆளும்வர்க்கங்களும், அவற்றின் அடிவருடி அரசும் ஒருபோதும் ஆதரிக்காது. இந்திரா காந்தி காலத்தில் ஆதரித்திருந்தா லும், பயிற்சியளித்து விடுதலைப் புலிகள் போன்ற அமைப்புகள் உருவாக காரணமாக இருந்திருந்தாலும் அது கூட, அவர்களை இலங் கையின் சிங்கள பேரினவாத ஆளும்வர்க்கப் பிரிவினருக்கு எதிராக நிறுத்தி இலங்கை மீதான இந்திய ஆளும்வர்க்கங்களின் மேலாதிக் கத்தை நிலைநாட்டுவதற்காகத்தானே அன்றி, வேறு எதற்காகவும் இல்லை; ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுத் தருவதற்காக நிச்சயம் இல்லை.

ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்திற்கு எதிரி யாக நிற்கிறது இந்திய அரசு. இந்தியா தெற்காசிய பிராந்தியத்தின் பிராந்திய வல்லரசு. அமெரிக்க மேல்நிலை வல்லரசின் உலக மேலா திக்க நோக்கங்களுக்கு அடிவருடியாக, அதன் போர் ரதத்தில் இணைக் கப்பட்டுள்ள பிராந்திய வல்லரசு. எந்த வல்லரசாகட்டும், பிராந்திய வல்லரசாகட்டும் அவை அனைத்தும் எந்தவொரு தேசிய இனத்தின் சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் இயற்கையாகவே எதிரிகளாகும்.

ஆனால், ''இந்தியா தலையிட்டு போரை நிறுத்த வேண்டும்'' என் பதே இப்பிரச்சினையில் பொதுவான கோரிக்கையாக இருந்திருக்கி றது. இதில் விடுதலைப் புலிகள், சிங்கள பேரினவாத அரசு இரண்டு தரப்பும் போரை நிறுத்த வேண்டும் என்ற பொருளில் பலர் புரிந் துள்ளனர்; இந்திய அரசும் அப்படித்தான் சொல்கிறது. உண்மையில், ''சிங்கள பேரினவாத அரசே, ஈழத்தமிழர்களின் மீதான இனப்படு கொலைப் போரை நிறுத்து!'' என்பதே சரியான கோரிக்கையாகும். ஆனால் இத்தகைய தெளிவான, சரியான சொற்றொடர்களில்

www.padippakam.com

கோரிக்கையை முன் வைப்பதில்லை. இந்தியா தலையிட்டுப் போரை நிறுத்த வேண்டும் என்று பொத்தாம் பொதுவில்தான் கோரிக்கையை முன் வைக்கிறார்கள்.

இரண்டாவதாக இந்தக் கோரிக்கையைக் கூட ஒரு கருணை மனுவாகத்தான் முன் வைக்கின்றனர். சிலர் இறைஞ்சுகிறார்கள்; சிலர் கெஞ்சுகிறார்கள். சிலரோ காலடியைப் பற்றாத குறையாக மன்றாடுகிறார்கள். அரசியல், பொருளாதாரம், பண்பாடு உட்பட அனைத்துத் துறைகளிலும் தங்களது வாழ்வைத் தாங்களே சுதந்திரமாகத் தீர்மானித்துக் கொள்ளும் சுயநிர்ணய உரிமை எனும் அரசியல் கோரிக்கைகளுக்காக ஈழத் தமிழர்கள் போராடுகிறார்கள் என்பதையோ, அதனால் தான் அதற்காக மட்டும்தான் அவர்கள் மீது இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது என்பதையோ இவர்கள் பார்க்கத் தவறுகிறார்கள்; அல்லது மக்களிடமிருந்து திட்டமிட்டு மறைக்கிறார்கள். உரிமைக்கான போராட்டம் என்ற அடிப்படையில் அவர்களது போராட்டத்தை அங்கீகரித்து, அந்தப் பொருளில் அவர்கள் மீதான இனப்படுகொலை அநியாயமானது; எனவே தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்று கோருவதே உண்மையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக நிற்பதாகும். அப்படியின்றி, ''கருணை காட்டுங்கள், பாவம், தொப்புள்கொடி உறவு'' என்றெல்லாம் உணர்ச்சிப்பூர்வமாகப் பேசினாலும், அது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வதோடு, ஈழத் தமிழர்களையும் ஏமாற்றுவதாகும்.

ஈழத் தமிழர்களை ஈவு இரக்கமின்றி இனப்படுகொலை செய்கிற தம்பி சிங்கள பேரினவாத அரசு என்றால், அதை ''செய்.. சபாஷ்'' என்று தட்டிக்கொடுக்கும் அண்ணன்தான் இந்திய அரசு. அதாவது, தெற்காசியப் பிராந்திய வல்லரசு; அமெரிக்காவின் தெற்காசியப் பேட்டை ரவுடி. எனவே, ஈழத் தமிழருக்கு பகைமைச் சக்திதான் இந்திய அரசு; அந்த எதிரியிடமே 'கருணை காட்டுங்கள்' என்று மன்றாடுவது எவ்வளவு பெரிய மடைமை! எதிரியையே நட்பாகக் கருதும் கையாலாகாத்தனம்!

ஆயினும் இதைத்தான் ம.தி.மு.க., பா.ம.க. முதலான ஓட்டுக் கட்சி பிழைப்புவாதிகள் முதல், தேர்தலில் பங்கேற்காத பல தமிழ் தேசியவாதிகள் வரை அனைவரும் செய்துவருகிறார்கள். ம.தி.மு.க., பா.ம.க. போன்றோர் மைய அரசை பார்ப்பன பனியா அரசு என்றோ, டில்லி வல்லாதிக்கம் என்றோ கூறுவதில்லை. காங்கிரசு, பா.ஜ.க. முதலான கட்சிகளுடன் கூட்டு சேர்ந்து, வாலைக்குழைத்து பதவியில் அமரும் பிழைப்புவாதமே அவர்களது அரசியலாக உள்ளதால், இந்திய



படிப்பகம்

மேலாதிக்கத்திடம் மன்றாடுவது அவர்களது அரசியலுக்குப் பொருத் தமானதாகவே உள்ளது.

ஆனால் 'டில்லி ஏகாதிபத்தியம்' என்றும் 'தன்னுரிமைக்கு முன் னுரிமை' என்றும் 'தமிழ்த்தேச விடுதலை' என்றும் பேசும் தமிழ்த் தேசியவாதிகள் செய்தது என்ன? தமிழ் ஈழம் இந்திய வல்லாதிக்க அரசின் அச்சிலேயே சுழலும் என்றும் இந்திய ஆளும் வர்க்கங்களின் புவிசார் நலன்களுக்கு (அதாவது தெற்காசிய மேலாதிக்கத்துக்கு) புலிகள் துணையாக இருப்பார்கள் என்றும் பாலசிங்கம் போன்றோர் தொடர்ந்து பேசியபோது இவர்கள் யாரும் அதனை இடித்துரைக்க வில்லை. மாறாக, இந்தியாவில் தமிழினம் உள்ளிட்ட தேசிய இனங்களை ஒடுக்கும் பார்ப்பன பனியா அரசுக்கு புலிகள் விசுவாச மாக இருப்பார்கள் என்று இவர்களும் சான்றிதழ் கொடுத்தார்கள்.

மேலாதிக்கத்துக்கு விசுவாசமாக இருப்பது என்பதன் பொருள் என்ன? தெற்காசியப் பகுதியில் வங்கதேசம், நேபாளம், இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளின் மீது இந்திய அரசு நிறுவியிருக் கும் ஆதிக்கத்துக்கும், நடத்தும் தலையீடுகளுக்கும், திணிக்கும் சுரண் டலுக்கும் தமிழ் ஈழம் துணையாக இருக்கும் என்பதுதான். அதுமட்டு மல்ல, காஷ்மீரிலும் வடகிழக்கிலும் இந்தியா நடத்தும் இன ஒடுக்கு முறைக்கும், ஒருவேளை தமிழகத்தில் இவர்கள் தன்னுரிமைப் போராட்டம் தொடங்கினால் அதற்கும் தமிழ் ஈழ அரசு எதிராக இருக்கும் என்பதே இதன் பொருள். சிங்கள இனவெறியின் ஆதிக்கத் திலிருந்து விடுபடுவது என்ற ஒற்றை நோக்கத்துக்காக, ஈழத்தமிழர் கள் மட்டுமின்றி இங்குள்ள தமிழர்களும், இந்திய மேலாதிக்கத்தை யும், பார்ப்பன தேசிய ஒடுக்குமுறையையும் மனமுவந்து ஏற்றுக் கொள்ளவேண்டுமாம்.

இவர்களது கொள்கை, அடிமைத்தனத்தை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமின்றி, இந்திய மேலாதிக்கத்தின் நியாயத்தையும் அங்கீகரிக்கிறது. அடிமையாக இருப்பதற்குத் தாங்கள் அளிக்கும் வாக்குறுதியை நம்பு மாறு இந்திய ஆளும் வர்க்கத்திடம் வேண்டுகோளும் விடுகிறது. இந்த வேண்டுகோள்கள் மற்றும் சத்தியப் பிரமாணங்களைக் கேட்டு இந்திய ஆளும் வர்க்கம் மனம் மாறிவிடும் என்றும் ஆவலுடன் எதிர்பார்க் கிறது. 'அதிகாரிகளை மாற்றிவிட்டால் இந்தியாவின் ஈழக்கொள்கை மாறிவிடும்' என்ற நம்பிக்கை இந்தப் புள்ளியிலிருந்துதான் தொடங்கு கிறது. ம.தி.மு.க, பா.ம.க போன்ற பிழைப்புவாதக் கட்சிகளும், 'நேர்மையான' தமிழ்த்தேசியவாதிகளும் இந்தப் புள்ளியில்தான் கொள்கைரீதியாக ஒன்றுபடுகிறார்கள்.

இந்திய ஆளும் வர்க்கங்களைப் பற்றியும், அரசைப் பற்றியும் தங்களுக்குத் தெரியும் என்றும், ஈழத்துக்கு ஆதரவு தேடும் ஒரு தந்திர மாகத்தான் இவ்வாறு பேசுவதாகவும் இவர்கள் விளக்கமளிக்கலாம். உண்மையை மனதில் வைத்துக் கொண்டு, பொய்யை மக்கள் மத்தி யில் பரப்புவதற்குப் பெயர் அரசியல் அல்ல. மக்களை மந்தையாக வும், பகடைக்காயாகவும் கருதும் பாசிஸ்டுகள்தான் அரசியல் என்ப தையே தந்திரமாகவும் சூழ்ச்சியாகவும் கருதி அமல்படுத்த முடியும்.

ஆனால் இத்தகைய 'தந்திரங்களால்' ஆளும் வர்க்கம்தான் எப் போதும் ஆதாயம் அடைகிறது. இந்திய மேலாதிக்கம் ஈழவிடுதலைக்கு எதிரியாக இருக்கிறது என்பதை அம்பலப்படுத்தி எதிரியை அரசியல் ரீதியாகத் தாக்காத காரணத்தினால், தன்னுடைய நடவடிக்கைகளுக்கு பதில் அளிக்கும் நிலையை இவர்கள் இந்திய ஆளும் வர்க்கத்துக்கு ஏற்படுத்தவே இல்லை. முப்பதாண்டு காலமாக ஈழப்போராட்டத்தின் எதிரியான இந்திய அரசை நண்பனாகச் சித்தரித்து, எதிரியின் கருணைக்கு மன்றாடும் கையாலாகாத்தனம்தான் இவர்களுடைய அரசியலில் மேலோங்கியிருந்திருக்கிறது. ஆனால் சிங்கள அரசுக்குத் துணை நிற்பதிலும், போரைத் தொடர்ந்து நடத்துவதிலும்தான் இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன் அடங்கியிருக்கிறது என்ற உண்மை நம் கண்முன்னால் தெரிகிறது. டாடா, அம்பானி உள்ளிட்ட இந்தியத் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளின் இலாபத்தையும் நலனையும் பலியிட்டு, இந்திய அரசு ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் என்று இவர்கள் நம்பு கிறார்கள் என்றால் அது எத்தகைய மடமை!

சரி, இவர்கள் கோருவது போல இந்திய அரசு நினைத்தால் போரை நிறுத்த முடியுமா? மனது வைத்தால், இந்திய அரசால், ராஜபக்சே அரசை மிரட்டி தாக்குதலை நிறுத்தி விட முடியுமா? முடியாது என்ப தும் செய்யாது என்பதும்தான் யதார்த்தம்! இந்திய அரசால் ஏன் செய்ய முடியாது என ஏற்கெனவே விளக்கியுள்ளோம்; அதிகம் நிர்ப்பந்தித் தால் இலங்கை அரசு இந்தியாவை உதறிவிட்டு சீனா பக்கம் அதிகமாக சாய்ந்துவிடும்; இதன் விளைவாக இந்திய தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நலன்கள் பாதிக்கப்படுமென்பதால், ராஜபக்சே அரசு எடுக்கும் முடிவை இந்திய அரசு ஜீரணித்துக் கொள்ளும். அவ்வளவு தான்.

விடுதலைப் புலிகளைத் தீர்மானகரமாகத் தோற்கடித்து, இன்னும் ஒரு சில நாட்களில் முழு வெற்றி பெற்றுவிட முடியும் என்ற நிலைமை



படிப்பகம்

www.padippakam.com

இருக்கும்போது, சிங்கள பேரினவாத அரசு தாக்குதலை நிறுத்த ஒப்புக் கொள்ளாது. அமெரிக்கா வலியுறுத்தியதையே இலங்கை அரசு ஏற்க மறுத்திருக்கிறது. ஒரு மூன்றாவது தரப்பிடம் விடுதலைப் புலிகள் சரணடைய இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்று அமெரிக்கா கோரியிருந்ததற்கு இலங்கையின் பாதுகாப்புத்துறை செயலர் கோத்த பய ராஜபக்சே பின்வருமாறு பதிலளித்திருக்கிறார். ''அமெரிக்கா இப் படி ஒரு வேண்டுகோள் விடுத்ததற்கு வெட்கப்பட வேண்டும்.. உங்களு டைய வேலையைப் பாருங்கள்... இது முழுக்க எங்களது உள்நாட்டு விவகாரம்... தலையீடு செய்ய நாங்கள் யாரையும் அனுமதிக்க மாட்டோம்;'' (தி நியூ இண்டியன் எக்ஸ்பிரஸ், 26.4.09)

புலிகள் இயக்கத்தின் தலைமை மட்டும் பாதுகாப்பாக வெளியே றிச் செல்வதற்கு இலங்கை அரசு அனுமதிக்க வேண்டும் என்று அமெ ரிக்கா வைத்த கோரிக்கையையும், இலங்கை நிலைமையை மனிதா பிமான நோக்கில் ஆய்வு செய்ய தங்களது சிறப்புத் தூதரை அனும திக்க வேண்டும் என்ற பிரிட்டிஷ் அரசின் கோரிக்கையையும், போரில் சிக்கிக் கொண்ட பொதுமக்களை மீட்க அனுமதிக்கவேண்டும் என்ற பிரெஞ்சு அரசின் கோரிக்கையையும் தடாலடியாக நிராகரித்திருக்கிறார் ராஜபக்சே. ''போர்க்களத்தில் அப்பாவிப் பொதுமக்களின் நிலையை நேரில் பார்வையிட வேண்டும் என்று மேலைநாடுகள் எங்களை நச்ச ரிக்கிறார்கள். அப்படிப்பட்ட விஜயங்கள் எல்லாம் தேவையில்லை. என்ன நடக்கிறது என்பதைத்தான் தொலைக்காட்சிகள் காட்டுகின்ற னவே!... நாங்கள் என்றைக்கும் போர் நிறுத்தம் செய்யவில்லை. இப் போது போரை நிறுத்தப் போவதும் இல்லை'' என்று முகத்திலடித் தாற்போலப் பேசியிருக்கிறார் மகிந்த ராஜபக்சே. (எக்ஸ்பிரஸ், 1.5.09)

இவ்வாறு இவர்கள் கொக்கரிப்பதன் பின்னணி - சீனாவின் ஆதரவு. வளர்ந்து வரும் பொருளாதார சக்தியான சீனாவின் மேலா திக்க விழைவுகளை நன்றாக அறிந்திருந்தாலும், பொருளாதார ரீதியில் பின்தங்கி வரும் மேல்நிலை வல்லரசான அமெரிக்கா, எல்லா விசயங் களிலும் சீனாவை எதிர்க்க முடியாத நிலையில் உள்ளது. கேந்திரமான விசயங்களில் விடாப்பிடியாக இருந்தாலும் பிற விசயங்களில் அது சீனாவுடன் தீர்மானகரமாக மோதலில் இறங்கத் தயாராக இல்லை. உலக், பிராந்திய நிலைமைகளும் - சக்திகளின் பலாபலமும் இவ்வாறு இருக்கின்றன என்பதுதான் எதார்த்தம். இந்தியாவோ, அமெரிக்காவோ, ஐ.நா.வோ இலங்கை அரசைத் தடுத்து நிறுத்தும் நிலைமை இப்போது இல்லை. கசப்பாக இருப்பினும் இதுதான் உண்மை.



படிப்பகம்

www.padippakam.com

காலம் கடந்து விட்டது! விடுதலைப் புலிகளின் தலைமை வீழ்த்தப்படுவதும், புலிகளின் இயக்கம் நிலையான இராணுவம் என் பதிலிருந்து கொரில்லாக் குழுக்களாக மாறுவதும் தவிர்க்க முடியாதது. ஈழத் தமிழர்களின் வாழ்க்கை இருபத்தைந்து ஆண்டு காலம் வரலாற்று ரீதியாகப் பின்தங்கிப் போன சோகம் போல, அவர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டமும் ஒரு பெரும் பின்னடைவுக்கு ஆளாகின்ற இன்னொரு சோகமும் நடைபெறுவது தவிர்க்கவியலாததாகவே உள்ளது.

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கும் விடுதலைக்கும் இயற்கை எதிரிகளான வல்லரசுகள், பிராந்தியத் துணை வல்லரசுகளை நட்பு சக்தியாகக் கருதி, அவற்றின் தயவில் கருணையினால் தேசிய இனச் சுதந்திரம் பெற்று விடலாம் என்பது அழிவுக்கும் அவநம்பிக் கைக்கும் தான் இட்டுச் செல்லும்! ஒடுக்குகிற தேசிய இனத்திலுள்ள பாட்டாளி வர்க்கம் மற்றும் பிற ஜனநாயக சக்திகளின் ஆதரவைத் திரட்டாமல் தேசிய இனப் போராட்டம் வெற்றிபெற முடியாது (ஈழம்), அப்படியே வெற்றி பெற்றாலும், தொடர்ந்து உள்நாட்டுச் சண்டை, குழப்பம் ஆகியவற்றில் மூழ்கி பெருந்துயர் அடையும். (கிழக்கு தைமூர், எரிட்ரியா); ஆயுதம் ஏந்திக் களத்தில் நின்றால் அது ஒன்றே போதும் அவர்கள் விடுதலை வீரர்கள், போராளிகள், வெல்லற்கரிய வர்கள் என்ற சாகச வழிபாடு சவடால் அடிக்கவும் உண்மையான, கடுமையான போராட்டத்திலிருந்து மக்களை தனிமைப்படுத்தவும் மட்டுமே உதவும்; மக்களை அரசியல்படுத்தாத சுத்த இராணுவவாதக் கண்ணோட்டம், தனிநபர் வழிபாடு, பாசிச வழிமுறைகள் எல்லாம் நட்பு சக்திகளைத் தனிமைப்படுத்தும்; எதிரிகளில் சிலரைப் பிரித்துப் பார்த்து உறவு கொண்டு சோரம் போவது ஆகியவைகளுக்கே இட்டுச் செல்லும்! இது போன்ற பல்வேறு படிப்பினைகளை புலிகளின் தோல் வியும் ஈழப்போராட்டத்தின் பின்னடைவும் உலகத்திற்கு எடுத்துக் காட்டும்.

★★★



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கையில்
# இந்திய ஆளும்வர்க்கத்தின் நலன்கள்
# விரிவடைந்து வருவது பற்றி...

இந்தியா இலங்கை இடையே 1998-இல் கையெழுத்தான இந்திய சிறீலங்கா சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (ISLFTA) தான் அதுவரை போடப்பட்ட மூன்று முக்கிய ஒப்பந்தங்களிலேயே பொருளாதாரத் தன்மை கொண்டதாகும். பொருளாதார ஒருங்கிணைப்பே இதன் அழுத்தமாக இருந்தது. மார்ச் 2000-இல் இந்த ஒப்பந்தம் அமலுக்கு வந்ததிலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் விரிவடைந்து கொண்டேயிருந்ததுதான் இந்தியா - இலங்கை இடையிலான உறவின் முதுகெலும்பாக மாறியது. இந்த உறவு, ஒத்துழைப்பு மற்றும் நம்பிக்கையின் மூலம் புதிய மட்டங்களை எட்டியது.

இரு நாட்டுப் பொருட்களின் ஏற்றுமதி இறக்குமதியில் வரிகளற்ற முறையைப் புகுத்துவது, முன்னுரிமை தரப்படும் பொருட்களுக்கு வரிக்குறைப்பு ஆகிய முறைகள் மூலம் ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் சுதந்திர வர்த்தகப் பகுதியாக உருவாக்குவது என்பதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கமாகும். இந்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இந்திய முதலீடுகள் இலங்கையில் அதிகரித்தன; வர்த்தகமும் பெருகியது. 2006-இல் மொத்த வர்த்தக அளவு 260 கோடி டாலர்களுக்கு உயர்ந்தது. இது பத்தாண்டுகளுக்கு முன்பு இருந்த அளவை விட ஐந்து மடங்கு அதிகமாகும். 1990-களில் இந்திய முதலீடு 40 இலட்சம் டாலர்கள் என்ற அற்ப அளவிலிருந்து 2006-இல் 1500 இலட்சம் டாலர்களாக உயர்ந்தது.



படிப்பகம்

www.padippakam.com

2005-ஆம் ஆண்டில் சார்க் நாடுகளில் இந்தியா செய்திருந்த மொத்த முதலீடுகளில், பாதி இலங்கையில் மட்டும் செய்யப்பட்டிருந்தது. இதன் மூலம் இலங்கையின் நான்காவது பெரிய முதலீட்டாளராக இந்தியா உயர்ந்தது.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (Free Trade Agreement) 1998-இல் இந்திய-இலங்கை அரசுகளிடையே கையெழுத்தானது; மார்ச் 2000 முதல் அமலுக்கு வந்தது. 2000-ஆம் ஆண்டில் 658 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த இந்திய-இலங்கை வர்த்தகம், 2007-இல் 3266 மில்லியன் டாலராக, (7 ஆண்டுகளில் 5 மடங்கு) அதிகரித்தது. இலங்கையின் மொத்த வர்த்தகத்தில் ஆறில் ஒரு பங்கு (16.8%) இந்தியாவுடன் நடக்கிறது (1 மில்லியன் = 10 லட்சம்; இந்திய ரூபாய் கணக்குக்கு 50-ஆல் பெருக்குக).

தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இலங்கை உருவெடுத்தது. உலக அளவில் இலங்கையின் மிகப்பெரிய வர்த்தகக் கூட்டாளியாக இந்தியா மாறியது. இலங்கையின் நான்காவது பெரிய முதலீட்டாளர் இந்தியா. இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஏற்றுமதியின் அளவு 2800 மில்லியன் டாலர்கள். இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி 516.5 மில்லியன் டாலர்கள்.

இலங்கை முதலீட்டு வாரியத் தலைவர் ஆர். வாதவாலா, அமலுக்கு வர இருக்கும் 'சிபா' (CEPA) மூலம் இருநாட்டு வர்த்தகம் மேலும் விரிவடையும் என்றும், இலங்கையின் எதிர்காலப் பொருளாதார நடவடிக்கைகளில் இந்தியாவுக்கு அதிவுயர் முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் கூறினார். செப்டம்பர் 2006-இல் இந்திய-இலங்கை தொழில் வர்த்தகக் கழகத்தை இந்திய நிதி அமைச்சர் தொடங்கி வைத்தார்.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தைத் தொடர்ந்து இலங்கையில் இந்தியாவின் முதலீடுகள் கணிசமாக அதிகரித்துள்ளன; 2007-இல் இந்தியாவின் மொத்த முதலீடு 400 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

சார்க் பிராந்தியத்திற்குள் இந்திய முதலாளிகள் தங்களது நேரடி முதலீட்டிற்கான முன்னுரிமை தரும் நாடாக இலங்கை இருக்கின்றது. இந்த பிராந்தியத்திற்குள் இந்திய முதலாளிகள் பிறருடன் வைத்திருக்கும் கூட்டு நிறுவனங்கள், இந்தியர்கள் முழுவதும் உடைமை



படிப்பகம்

www.padippakam.com

கொண்டுள்ள துணை நிதிநிறுவனங்கள் ஆகியவற்றில் 50%-க்கும் மேல் இலங்கையில் தான் உள்ளன. பிராந்திய அளவில் கூட்டு நிறுவனங் களில், இந்தியக் கம்பெனிகள் செய்துள்ள முதலீடுகளில் 54% இலங் கையில் செய்யப்பட்டுள்ளன. 1991-இல் இலங்கை ரூபாயில் 74 கோடி மதிப்புள்ள 23 திட்டங்களுக்கான முதலீடுகள் வெளியிலிருந்து வந்தன. இது 2000-இல் 1250 கோடி ரூபாய்களாக உயர்ந்தது (150 திட்டங்கள்).

இலங்கையில் முதலீடுகளை ஈர்த்த முக்கிய துறைகள் இரும்பு, சிமெண்ட், ரப்பர் பொருட்கள், சுற்றுலா, கணினி மென்பொருள், தகவல் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் பிற தொழில்முறைச் சேவை கள். இலங்கையில் அண்மைக்காலமாக முதலீடு செய்துள்ள சில முன் னணி இந்திய நிறுவனங்கள்: குஜராத் அம்புஜா, ஏசியன் பெயிண்ட்ஸ், லார்சன் அண்டு டூப்ரோ, டாடா இன்ஃபோடெக், ஆப்டெக் லிமிடெட், பெங்கால் வாட்டர் ப்ரூஃப் லிமிடெட் கல்கத்தா, சிரீ இஷார் குரூப், இன்டோர், நீல்கமல் பிளாஸ்டிக்ஸ் மும்பை, குஜராத் கிளாஸ் லிமி டெட், என்ஐஐடி, அப்பல்லோ ஹாஸ்பிடல்ஸ், அன்சால் ஹவுசிங் கன்ஸ்ட்ரக்சன் லிமிடெட், மகிந்திரா பிரிட்டிஷ் டெலிகாம்; இவை யன்றி, சியட் கம்பெனியும் தாஜ் ஹோட்டல்ஸ் நிறுவனமும் தங்களது செயல்பாடுகளை விரிவாக்கி வருகின்றன.

மொத்தத்தில் தெற்காசியப் பிராந்தியத்தில் இந்தியாவின் அன்னிய முதலீடுகளில் பாதிக்கு மேல் இலங்கையில் செய்யப்பட்டுள்ளது. மேற் கூறிய விவரங்கள் எல்லாம் ஒரு புதிய பரிணாமத்தின் தொடக்கம் மட்டுமே.

துறைமுகம், ரயில்வே, மின் உற்பத்தி மற்றும் விநியோகம், பெட்ரோலியத் துரப்பணம், கனிவளம், சுற்றுலா, கல்வி, மருத்துவம் ஆகிய எல்லாத் துறைகளிலும் உள்ள முதலீட்டு வாய்ப்புகள் கண்டறியப்பட்டுள்ளன. தொலை தொடர்புத் துறையிலும் ஐ.டி - பி.பி.ஓ. துறையிலும் அபரிதமான முதலீட்டு வாய்ப்புகள் அவதானிக் கப்பட்டு முதலீடுகள் மும்முரமாகியுள்ளன. இலங்கை முன்மொழிந்த இந்தியா- இலங்கை இடையிலான பாலம் அமைப்பு பரிசீலனையில் உள்ளது.

எனினும், இலங்கையில் சீன முதலீடு 10 மடங்கு அதிகரித் துள்ளது. இது இந்தியாவுக்கு உறுத்தலாகவே உள்ளது.



படிப்பகம்

www.padippakam.com

இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதியும் செழித்து வளர்ந்தது. வர்த்தக உடன்பாடுகள் இலங்கைக்கு மிகமிகச் சாதகமாகப் போடப்பட்டிருந்தன. வர்த்தக ஏற்றத்தாழ்வைக் குறைப்பதை நோக்கமாகக் கொண்டவை இவை. ஒப்பந்தம் போட்டதற்குப் பின் இரு ஆண்டுகளிலேயே இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதி 342% அதிகரித்தது. குஜ்ரால் கோட்பாடுகளின் (Gujral principles) கீழ் இலங்கைக்கு அளிக்கப்பட்டிருந்த மிகவும் சாதகமான அம்சங்கள் காரணமாக வர்த்தக ஏற்றத்தாழ்வுகள் 2002-ஆம் ஆண்டிற்குள் 5:1 என்ற விகிதத்திற்குக் குறைந்தது. இது 1998-இல் 16:1 என்றவிகிதத்தில் இருந்தது. 2003-ஆம் ஆண்டிலிருந்து இலங்கையின் மூன்றாவது பெரிய ஏற்றுமதி நாடாக இந்தியா மாறியது.

இந்தியத் தரப்பு 3 ஆண்டுகளில் 4150 பொருட்கள் மீதான இறக்குமதி வரியை ரத்து செய்தது. இலங்கை 8 ஆண்டுகளில் 3932 பொருட்கள் மீதான வரியை ரத்து செய்தது. சுதந்திர வர்த்தக ஒப்பந்த அடிப்படையிலான சலுகைகள் மட்டுமே இலங்கையின் ஏற்றுமதி அதிகரிப்பிற்குக் காரணம்.

அதேசமயம் இலங்கையின் ஏற்றுமதி பிரதானமாக வேளாண் பொருட்கள், தேயிலை, ரப்பர், தாவர எண்ணெய், மரங்கள் - மரச்சாமான்கள், ஏலம், மிளகு போன்ற வாசனைப் பொருட்கள், மீன் உணவு, தாதுப் பொருட்கள், ஆடைகள் போன்ற தாழ்நிலை முதன்மைப் பொருட்களே. இவற்றுக்கு அளிக்கப்படும் சலுகைகளால் இந்திய ஆளும் வர்க்கத்திற்குப் பாதிப்பில்லை. இந்தச் சலுகைகளின் உள்நோக்கம் இந்தியத் தரகுமுதலாளிகளின் நலன்தான். மலிவான முதன்மைப்பொருள் இறக்குமதியால் அவர்களது இலாபம் கூடுகிறது. இறக்குமதியால் பாதிக்கப்படும் உள்நாட்டு சிறு உற்பத்தியாளர்களைப் பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

இலங்கை முதலாளிகள் இந்தியாவில் முதலீடு செய்வதும் அதிகரித்துள்ளது. அவர்கள் மரச்சாமான்கள் நிறுவனமான தாம்ரோ, சிலோன் பிஸ்கெட்ஸ், மாஸ் ஹோல்டிங்க்ஸ், பிராண்டிக்ஸ் ஆடைகள் போன்றோர். இலங்கையில் செய்யப்பட்டுள்ள இந்திய முதலீடுகளோடு ஒப்பிட்டால் இது ஒன்றுமில்லை.

மேலும், இந்தியப் பொருளாதாரம் இலங்கையைக் காட்டிலும் சுமார் 40 மடங்கு அதிகமானது. எனவே இலங்கையின் ஏற்றுமதி



படிப்பகம்

www.padippakam.com

அதிகரிப்பும், மேற்கூறிய முதலீடுகளும் துரும்புக்குச் சமம். அதே சமயம், தனக்கு ஆதரவான, தன்னைச் சார்ந்து நிற்கும் நிலையில் ஒரு அடிவருடி முதலாளி / அதிகாரவர்க்கப் பிரிவை இலங்கையில் உரு வாக்கவும், வளர்ச்சிப் போக்கில் இந்தியாவை விட்டு அகல முடியாத நிலையை இலங்கைப் பொருளாதாரத்துக்கு உருவாக்கவும், ஒரு நீண்ட காலக் கண்ணோட்டத்துடன் இச்சலுகைகள் வழங்கப் படுகின்றன.

சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் வெற்றிகரமான முன்னேற்றத்தைத் தொடர்ந்து 2005 முதல் CEPA (Comprehensive Economic Partnership Agreement) ஒட்டுமொத்தப் பொருளாதாரக் கூட்டு நடவடிக்கைக்கான ஒப்பந்தம் என்ற வகையில் இருதரப்புப் பேச்சுவார்த்தை முன்னேறி யுள்ளது. வர்த்தகத்துக்கு அப்பால் மேலும் விரிந்த அளவில் தொழில், சேவைத்துறை முதலீடுகள் மற்றும் ஒட்டுமொத்தப் பொருளாதாரச் செயல்பாடுகளிலும் ஒத்துழைப்புக்கான முன்னேற்றத்தை நோக்கிய நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. CEPA இறுதி செய்யப்படும் நிலையை எட்டியுள்ளதாக இருநாடுகளுமே கடந்த ஜூலை 2008-இல் அறிவித்துள்ளன.

இவ்வாறாக இலங்கையின் பொருளாதாரத்தில் மேலாதிக்கம் வகிக் கவும், இந்திய ஆளும்வர்க்கங்களின் தேவையை இலங்கையில் நிறைவு செய்து கொடுக்கவும் இந்திய அரசு மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. இப்பிராந்தியத்தில் அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்க நிலையை உறுதிசெய்து கொள்ளவும் அனைத்து எத்தனிப் புகளையும் செய்கிறது இந்திய அரசு.

★★★



படிப்பகம்

www.padippakam.com

# இலங்கைப் பொருளாதாரத்தில் இந்தியத் தரகு அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் ஆதிக்கம் - சில விவரக் குறிப்புகள்

**டாடாவின் நிறுவனங்கள்:**

டாடாவின் தாஜ் ஹோட்டல் நெடுநாளாக இலங்கையில் இயங்குவதுடன் விரிவாக்க நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. மேலும் டாடாவின் VSNL, வாதவாலா தேயிலை நிறுவனம் தேயிலை, காப்பி, ரப்பர், எண்ணெய்ப் பனை அனைத்தையும் அடக்கியது, டாடா இன்ஃபோடெக் போன்றவை அங்கு இயங்குகின்றன.

உள்நாட்டுப் போருக்கு முன்பு 'சிலோன் டீ' என்று இலங்கைத் தீவு முழுவதும் பிரபலமாக விற்கப்பட்டது. இப்போது 'சிலோன் டீ' என்று ஒன்று இல்லை. பெரும்பாலான தேயிலைத் தோட்டங்களை டாடா வாங்கி விட்டதால், இப்போது 'இந்திய டாடா சிலோன் டீ' என்று மட்டுமே உள்ளது.

**ஆட்டோமொபைல் துறையில் ஆதிக்கம்:**

இலங்கையில் ஆட்டோமொபைல் தொழிலை மேலாதிக்கம் செலுத்துபவை அசோக் லேலண்டு, மாருதி, பஜாஜ் போன்ற இந்தியத் தரகு அதிகாரவர்க்க முதலாளித்துவ நிறுவனங்களே. இவை அந்தத் தொழிலில் 50%-ஐ கட்டுப்படுத்துகின்றன.



படிப்பகம்

www.padippakam.com

அசோக் லேலண்டு இலங்கை அரசுடன் 'லங்கா அசோக் லேலண்டு' என்ற பஸ் பாடி கட்டும் கூட்டுத்துறை நிறுவனத்தை நடத்துகிறது. தனது சேசிஸ்களை முழுமையாகவும், உதிரிப் பாகங்களா கவும் இலங்கைக்கு அனுப்புகிறது. அங்கே கோர்த்து, பாடி கட்டி விற்பனை செய்கிறது. இத்துறையில் அசோக் லேலண்டு நிறுவனமே ஆதிக்கம் செலுத்துகிறது.

டாடா மோட்டார்ஸ் தனது அனைத்து வகை வாகனங்களையும் வெற்றிகரமாக இலங்கையில் சந்தைப்படுத்தி வருகிறது. இலங்கையின் கார் சந்தையை மாருதி சுசுகி கார்கள் நிரப்புகின்றன. இலங்கையின் 2006-ஆம் ஆண்டு கார் விற்பனை சுமார் 26,500. இவ்வாண்டும் அந்நிலையே தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கை அரசின் எப்.டி.ஏ வரிச்சலுகைகள் மூலம் கார் விற்பனை மேலும் அதிகரிக்க வும் வாய்ப்புள்ளது.

கலுதரா, கிலனியா ஆகிய இடங்களில் தனது ஆலைகளை நிறுவி யிருக்கும் சியட் டயர்ஸ் நிறுவனம், ரூ.3.5 கோடி முதலீட்டில் மாதத் துக்கு 26,000 டயர் தயாரிக்கும் திறன் கொண்ட முதல் ரேடியல் டயர் உற்பத்தி ஆலையை செப்டம்பர், 2006ல் திறந்துள்ளது. இலங்கையின் டயர் தேவையில் 50%-ஐத் தனது பிடியில் வைத்திருக்கும் சியட் டயர்ஸ் விரைவில் மாதம் 1 லட்சம் கார் ரேடியல் டயர் தயாரித்து இலங்கைச் சந்தையில் விற்பதுடன், (எப்.டி.ஏ சலுகைகளைப் பயன்படுத்தி) ஏற்றுமதியும் செய்யவுள்ளது.

ஆதித்ய பிர்லா குழுமம் 120 மில்லியன் டாலர் முதலீட்டில் கார்பன் பிளாக் (Carbon black-டயர் தயாரிப்பில் கச்சாப்பொருள்) தயாரிப்புத் தொழிற்சாலை அமைக்கவுள்ளது.

**எண்ணெய் எரிவாயுத் துறையில்:**

இந்தியன் ஆயில் கார்ப்பரேசனின் துணை நிறுவனமான லங்கா ஐ.ஓ.சி, இலங்கையில் 170 பெட்ரோல் விற்பனை நிலையங்களை நடத்தி வருகிறது. தலா 1 கோடி ரூபாய் செலவில் மேலும் 300 நிலை யங்களை அமைக்கும் பணியைத் தொடங்கியுள்ளது. திரிகோணமலை எண்ணெய் வயலையும் (oil tank farm) நிர்வகித்து வருகின்றது.

ஏற்கெனவே செய்த 74.2 மில்லியன் அமெரிக்க டாலர்கள் முதலீட்டின்படியே முதல் 10 முன்னணி முதலீட்டாளர்களில் ஒன்றாகத்



படிப்பகம்

www.padippakam.com

திகழ்கிறது ஐ.ஓ.சி. மேலும் மசகு எண்ணெய் (லூப்ரிகண்ட்) தயாரிப்பு உற்பத்தி ஆலையையும் அது நிர்மாணித்து வருகிறது. 7 மில்லியன் டன் சுத்திகரிப்புத் திறனுள்ள ஆலையை அமைக்கவும் திட்ட மிட்டுள்ளது.

பிப்ரவரி, 2006-இல் இலங்கை அதிபர் மகிந்தா ராஜபக்சேயின் இந்திய வருகையின்போது, ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் - பெட்ரோலிய நிறுவனம் இலங்கையில் எண்ணெய்த் துரப்பணம் முதல் பெட்ரோலியப் பொருட்கள் சில்லரை வர்த்தகம் ஈராக அனைத்திலும் முதலீடு செய்யவுள்ளதாக அறிவித்தது

**தொலை தொடர்புத் துறையில்:**

இலங்கை தொலைபேசி மற்றும் தொலை தொடர்புத் துறைகளில் ரிலையன்ஸ் கம்யூனிகேஷன்ஸ், 1200 கோடி ரூபாய் மூலதனத்துடன் நுழைகிறது. ''ரிலையன்ஸ் மொபைல் லங்கா'' என்ற நிறுவனத்தை இலங்கையின் ''எலெக்ட்ரோடெக்ஸ்'' நிறுவனத்துடன் சேர்ந்து நிறுவியுள்ளது. இலங்கைச் சந்தையில் 40 சதவீதத்தைக் கைப்பற்றும் நோக்கத்துடன், அதாவது 5 மில்லியன் இணைப்புகளை வழங்கும் திட்டத்துடன் இவ்வாண்டில் தனது சேவையைத் தொடங்குகிறது.

மேலும் ரிலையன்ஸ், இலங்கையின் பெரியதொரு தொலைத் தொடர்பு நிறுவனமான ''லங்கா பெல்'' நிறுவனத்துடன் 27 மில்லியன் டாலர் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டுள்ளது. இந்தியா, இலங்கை, மொரீசியஸ் இடையே ஆழ்கடல் கேபிள் இணைப்பை ஏற்படுத்தும் இவ்வொப்பந்தத்தின் கீழ் ஓராண்டில் பணிகள் தொடங்கவுள்ளன.

2009 பிப்ரவரியில் பாரதி ஏர்டெல் 150 மில்லியன் அமெரிக்க டாலர் (ரூ. 7500 கோடி) முதலீட்டுடன் விரிந்த அளவில் 5-ஆவது மொபைல் ஆபரேட்டராக இலங்கையில் நுழைந்திருக்கிறது. ''ஹலோ சிறீலங்கா உங்களுக்கு என்ன வேண்டும்? உங்கள் எல்லோருக்கும் இலவச சிம்கார்டுகள்'' என்று ஷாருக்கானை வைத்து பரவலாக விளம்பரம் செய்யப்பட்டு, இலவசமாக சிம் கார்டுகள் வழங்கப்படுகின்றன.

**ஆற்றல் துறையில்:**

ஆற்றல் துறையில் தேசிய அனல் மின் கழகமும் (NTPC) இலங்கை மின்வாரியமும் (CEB) இணைந்து 300 மெகா வாட் அனல் மின்



படிப்பகம்

www.padippakam.com

நிலையம் ஒன்றை சம்பூரில் (திரிகோணமலை) 500 மில்லியன் அமெரிக்க டாலரில் அமைக்கும் திட்டம் இறுதி செய்யும் நிலையிலுள்ளது. மேலும் புத்தளத்தில் 900 மெகா வாட் அனல் மின் நிலையம் ஒன்றை அமைக்க தேசிய அனல் மின் கழகம் திட்டமிட்டுள்ளது.

இந்தியா - இலங்கை இரு நாடுகளுக்கும் இடையே மின் விநியோகத் தொடர்பை அமைக்கும் (interconnection of eletricity grid) சாத்தியப்பாட்டை ஆய்வுசெய்ய புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) இறுதி செய்யப்பட்டுள்ளது.

**தகவல் தொழில்நுட்பத் துறையில்:**

தகவல் தொழில்நுட்பப் பூங்கா அமைக்க இந்திய நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்தங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதனையொட்டி, அடிக்கட்டுமான முதலீடாக 122 மில்லியன் டாலரும், கட்டிடக் கட்டுமான-ரியல் எஸ்டேட் (property development) மற்றும் தகவல் தொழில் நுட்பப் பூங்கா அமைக்க 58 மில்லியன் டாலரும் இந்திய நிறுவனங்களால் முதலீடு செய்யப்பட உள்ளது.

மகிந்திரா அண்டு மகிந்திரா குழுமத்தின் 'மகிந்திரா லைஃப் ஸ்பேஸ் டெவலப்பர்ஸ்' நிறுவனத்துக்கும், இலங்கை முதலீட்டு வாரியத்துக்கும் இடையே கடுநாயகேவில் 65 ஏக்கரில் சிறப்புப் பொருளாதார மண்டலம் நிர்மாணிக்கும் ஒப்பந்தம் பிப்ரவரி 2008-இல் கையெழுத்தாகியுள்ளது. பண்டாரநாயகே சர்வதேச விமான நிலையம் அருகே தகவல் தொழில்நுட்பப் பூங்கா உள்ளிட்ட 3 மில்லியன் சதுர அடி கட்டுமானப் பணியைக் கொண்ட பெரும் ஒப்பந்தம் இது.

**ரயில்வே, சாலை மற்றும் கட்டுமானத் துறையில்:**

கடந்த 4 ஆண்டுகளில், இந்திய அரசு 281 மில்லியன் அமெரிக்க டாலர்கள் அளவுக்கு இலங்கைக்கு கடன் வழங்கியுள்ளது. ரயில்வே துறை மேம்பாட்டுக்காக 100 மில்லியன் டாலர் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. பெரிய கட்டுமானப் பணிகளை லார்சன் அண்டு டூப்ரோ மேற்கொள்ளவுள்ளது.

அறிவியல் தொழில்நுட்பத் துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் அக்டோபர் 2008-இல் கையெழுத்தாகியுள்ளது. இலங்கைப் போக்குவரத்துத் துறையும் (RDA) இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையும் (NHAI)



படிப்பகம்

www.padippakam.com

போக்குவரத்துத் தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் போக்குவரத்து வளர்ச் சிக்கான ஒப்பந்தம் ஒன்றை மே 2008-இல் செய்து கொண்டுள்ளன.

**இரும்பு, சிமெண்ட் ஆலைகள்:**

முதன்மைப் பொருள் உற்பத்தியை அந்தந்த தலத்திலும் முழுமைப் பொருள் உற்பத்தியை சந்தையின் (அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகள்) அருகிலும் செயல்படுத்தும் டாடா ஸ்டீல் நிறு வனத்தின் ஒரு கிளை இலங்கையில் ‘லங்கா ஸ்பெஷல் ஸ்டீல்’ என்ற பெயரில் இயங்குகிறது.

அல்ட்ரா டெக், குஜராத் அம்புஜா போன்றவை சிமெண்ட் துறை யில் செயல்படும் முக்கிய நிறுவனங்கள். யாழ்ப்பாணத்தில் இயங்கி, முடமாகிப் போன ‘லங்கா சிமெண்ட்ஸ்’ நிறுவனத்தை கூட்டுத் தொழில் அடிப்படையில் புணரமைக்க ஏப்ரல், 2008-இல் பிர்லா சிமெண்ட்ஸ் நிறுவனம் அழைக்கப்பட்டுள்ளது. சுண்ணாம்புப் படி கங்கள் நிறைந்த வளமான பகுதி அது. போரால் பாதிக்கப்பட்டுள்ள அவ்விடத்தைப் பார்வையிட பிர்லா சிமெண்ட்ஸ் நிறுவனம் அனு மதிக்கப்பட்டுள்ளது. ஜப்பானிய மிட்சுயி நிறுவனத்துக்குச் சொந்த மான டோக்கியோ சிமெண்ட்ஸ், ஹோல்சிம் போன்ற நிறுவனங்கள் விருப்பார்வம் இருந்தும் போர் காரணமாக முதலீடு செய்யத் தயக்கம் காட்டிய பகுதி இது.

**வங்கித்துறை, காப்பீடு மற்றும் கல்வி நிறுவனங்கள்:**

4 இந்திய வங்கிகள் இலங்கையில் இயங்குகின்றன. இவற்றில் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் முன்னணிப் பாத்திரம் வகிக்கின்றன. தற்போது ஐ.சி.ஐ.சி.ஐ வங்கி யும் நுழைந்துள்ளது. எல்.ஐ.சி நிறுவனமும் இங்கு இயங்குகிறது.

என்.ஐ.ஐ.டி, எம்.ஏ.எஃப்.ஓ.ஐ (மாஃபாய்) போன்ற கல்வி நிறுவனங்களும் இங்கு இயங்குகின்றன.

**பிற:**

ஏசியன் பெயிண்ட்ஸ், தனது 2003-ஆம் ஆண்டு விரிவாக்கத் திட்டத்தின் அடிப்படையில், இலங்கையின் இரண்டாவது பெரிய பெயிண்ட் நிறுவனமான டெல்மிகி போர்சித் அண்டு கோ



படிப்பகம்

www.padippakam.com

(பெயிண்ட்ஸ்) நிறுவனத்தின் 76% பங்கு மூலதனத்தை வாங்கித் தன தாக்கியுள்ளது. இதன் மூலம் இந்தத் துறையில் ஆண்டுக்கு 130 கோடி ரூபாய் சந்தை கொண்ட இலங்கையில் கால் பதித்துள்ளது.

லார்சன் அண்டு டூப்ரோ (எல் அண்டு டி), பெங்கால் வாட்டர் ப்ரூஃப், ஸ்ரீ இஷார் குரூப், அன்சால் ஹவுசிங், மஹேந்திரா பிரிட்டிஷ் டெலிகாம், கேதார் மெட்டல்ஸ் இரசாயன உற்பத்தியாலை போன் றவை இலங்கையில் இயங்கி வருகின்றன.

கேதார் மெட்டல்ஸ், சந்தாரா டெக்ஸ்டைல்ஸ் போன்ற நிறுவனங் களும் 2001-02-இலிருந்து செயல்பட்டு வருகின்றன.

சிலோன் கிளாஸ் கம்பெனியை விழுங்கிய நிக்கோலஸ் பிரமல் மேலும் ஒரு உற்பத்தியாலையைத் தொடங்கியுள்ளது.

பிரிட்டானியா நிறுவனம் தனது தொழிலைத் தொடங்கியுள்ளது.

இலங்கையின் முதலீடுகள் வாரியத்தின் (Board of Investments), அறிக்கையின்படி 2005-இன் வெற்றிகரமான இந்திய முதலீட்டாளர் பட்டியலில் சில: லங்கா ஐ.ஓ.சி, 74 மில்லியன் டாலர்; குஜராத் கிளாஸ், 19.6 மில்லியன் டாலர்; குளிர் சாதன உற்பத்தியாளர்கள் ஹைகாவா, 8 மில்லியன் டாலர்; மதர்சன் எலெக்ட்ரிகல்ஸ் அண்டு ஆட்டோ கேபிள் உற்பத்தியாளர், 1.6 மில்லியன் டாலர்; சியட் டயர்ஸ், 1.5 மில்லியன் டாலர்.

★★★



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

- இந்திய மேலாதிக்கத்தின் பின்புலம், தரகு அதிகார வர்க்க முதலாளிகளின் நலன் என்பதையும், இந்த ஆளும் வர்க்கங்களின் நலன்களுக்கு எதிராக ஒருபோதும் எந்த ஆட்சியும் செயல்படாது என்பதையும் நாம் பலமுறை வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். இந்திய அரசை எதிர்த்துப் போராடுவதும் அதன் பொருட்டு பிற விடுதலை இயக்கங்கள் மற்றும் மக்களின் ஆதரவைத் திரட்டுவதும்தான் ஈழ விடுதலைப் போர் வெற்றிபெற ஒரே வழி என்றும் கூறியிருக்கிறோம்.

- இவையெல்லாம் காரியத்துக்கு ஆகாத வழிகள் போலவும், தாங்கள் தெரிவு செய்திருக்கும் வழிதான் நடைமுறை சாத்தியமானது என்றும் கருதிக் கொண்டு தில்லிக்குக் காவடி எடுக்கும் வேலையைத் தொடர்ந்தார்கள் ஈழ ஆதரவாளர்கள். 'நரியைப் பரியாக்கி விடலாம்' என்பது அவர்களது நம்பிக்கை.

- இந்த அம்மையாரின் வெற்றி, போர் நிறுத்தத்தைக் கொண்டு வரும் என்று ஈழத் தமிழ் மக்களையும் புலிகளையும் நம்ப வைத்து அவர்களைப் படுகுழியில் தள்ளியிருக்கிறார்கள் ஈழ ஆதரவாளர்கள். எந்தப் புலிகளை இவர்கள் ஆதரித்தார்களோ, அந்தப் புலிகளையே காவு வாங்கிவிட்டது இவர்களுடைய பிழைப்புவாதத் தேர்தல் அரசியல்.

ரூ. 20/-

புதிய ஜனநாயகம்
வெளியீடு

படிப்பகம்